Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 58 | சனிக்கிழமை | தை 10 ஆம் நாள் 23 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## உயர்தர மாணவி சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஜன.23

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஸ்கந்தபுரம் 2ஆம் வாய்க்கால் பகுதி 18

## குடும்பப் பெண் உயிர் மாய்ப்பு!

சாவகச்சேரி, ஜன. 23

தவறான முடிவெடுத்து மூன்று பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றுள்ளது. குறித்த பெண் தூக்கில் தொங்கியதைக் கண்ட அயல 18



## வெடுக்குநாறி ஆலயத்தின் நிர்வாகத்தினருக்கு மறியல்

வவுனியா, ஜன.23

வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரன் ஆலய நிர்வாகத்தினர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வழக்குத் தவணைக்கு நீதிமன்றில் முன்னிலையாகாதமையால் அவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் 19

## தமிழர்களின் நிலங்கள் அபகரிப்பு; தமிழ்க் கட்சிகள் அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.23

வடக்கு, கிழக்கில் தற்போது மேற்கொள்ளப்படும் தொல்பொருள் ஆய்வு என்ற 19

# இலங்கைக்கு எதிராக சர்வதேச பொறிமுறை

கொழும்பு, ஜனவரி 23

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் கண்காணிப்பதற்கும் அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் கடந்த காலங்களில் இடம்பெற்ற பெரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைச் சேகரிப்பதற்கும் சர்வதேச நீதிப்பொறி முறை ஒன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை எதிர்வரும் 46 ஆவது கூட்டத் தொடரின் போது அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது. 19

## போர்க்குற்றங்களை ஆராய மூவரடங்கிய ஆணைக்குழு!



## சுகாதார அமைச்சருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு, ஜன. 23

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சரிடம் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் சோதனையிலேயே 18

## ஜெனிவாவை சமாளிக்க கோத்தாபய வியூகம்



கொழும்பு, ஜன.23

ஜெனிவா அமர்வில் இலங்கை அரசு இந்த முறை நெருக்கடிகளைச் சந்திக்கும் என்று எதிர்வுகூறப்படும் நிலையில், அதைச் சமாளிக்கும் நடவடிக்கைகளில் கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு இறங்கியுள்ளது. 19

## முறையற்ற அகழ்வாராய்ச்சி பிரச்சினையை உருவாக்கும்!

இராஜாங்க அமைச்சர் விதுரவிடம் மாவை நேற்றுச் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன.23

வடக்கு மாகாணத்தில் முறையற்ற தொல்லியல் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மூலம் தமிழ் மக்களைக் கிளர்ந்தெழ 19

## வடக்கில் கொரோனா; 22 நாள்களில் 408 பேர்

கொழும்பு, ஜன. 23

வடக்கு மாகாணத்தில் கடந்த 22 நாள்களில் மாத்திரம் 408 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் 237 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 109 பேருக்கும், யாழ். மாவட்டத்தில் 53 பேருக்கும் வைரஸ் 18

# கொரோனாத் தொற்று வடக்கில் மிக வேகம்!

யாழ்ப்பாணம், ஜன.23

வடக்கு மாகாணத்தில் நேற்று 50 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் 26 பேருக்கும், மன்னாரில் 23 பேருக்கும், யாழ்ப்பாணத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா பட்டாணிச்சூரில் கொரோனா தொற்று இனங்காணப்பட்டதை 18

## மன்னாரில் ஒருவர் தொற்றால் இறப்பு!

யாழ்ப்பாணம், ஜன.23

கொரோனாத் தொற்றால் மன்னாரில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இரண்டாக உயர்ந்துள்ள அதேவேளை. 18

## வவுனியா மருத்துவமனை ஊழியர்களுக்கும் தொற்று!

யாழ்ப்பாணம், ஜன.23

வடக்கு மாகாணத்தில் நேற்று 50 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களில் 3 பேர் வவுனியா பொது மருத்துவ 18

## கணவன், மனைவியை பலியெடுத்த கொரோனா

மட்டக்களப்பு, ஜன.23

மட்டக்களப்பு சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட கோட்டைமுனையைச் சேர்ந்த பெண் ஒருவர் கொரோனாத் தொற்று 18

# தமிழர்களின் பாதுகாப்புக்கு பிரான்ஸின் உதவி அவசியம்

## அந்த நாட்டின் எம்.பிக்கள் மக்ரோனுக்கு கடிதம்

**பாரிஸ், ஜனவரி 23**

**இலங்கையில் நீடித்த அமைதிக்கும் தமிழரது பாதுகாப்புக்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி பிரான்ஸ் உதவ வேண்டும் இவ்வாறு பிரான்ஸின் அதிபர் இம்மனுவல் மக்ரோனிடம் அவசர வேண்டுகோள் விடுக்கும் கடிதத்தை அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 பேர் கூட்டாக அனுப்பி வைத்துள்ளனர்.**

பாரிஸில் தமிழர்கள் அதிகமாக வசிக்கின்ற பிரதேசங்களைப் பிரதிநிதித்து வப்படுத்துகின்ற மக்கள் பிரதிநிதிகள் உட்பட பிரான்ஸின் பெரு நிலப் பரப்புக்கு வெளியே உள்ள தீவுகளின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் பலரும் அந்தக் கடிதத்தில் ஒப்பம் இட்டுள்ளனர்.

இலங்கையில் தமிழ் சமூகம் தற்போது எதிர்கொண்டுள்ள ஆபத்தான சூழ்நிலை மீது கவனத்தைக் குவிக்கும் நோக்குடன் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தில் :-

போருக்குப் பின்னர் தமிழர் பகுதிகளில் உண்மையான மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. தமிழருக்கு எதிரான நடவடிக்கைகள் வஞ்சகத்தனமான வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. 2015ஆம் ஆண்டு ஐ.நா தீர்மானத்தில் கூறப்பட்டவாறு ஓர் இடைக்கால நீதிச் செயல்முறையை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் தவறி விட்டது. போர்க் குற்றவாளிகளைத் தண்டிப்பது உட்பட பாதிக்கப்பட்ட தமிழர்களது நிலங்களை மீளளிப்பது, இழப்பீடுகளை வழங்குவது போன்றவற்றை உள்ளடக்கிய பொறிமுறையை இலங்கை நிறைவேற்ற வில்லை.

தமிழர்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுக்கள் மற்றும் கருத்துக்கள் அங்கு மேலெழுகின்றன. தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டு தமிழர்களுக்கு எதிராக அரசியல் நிர்வாகம் கையாளப்பட்டு வருகிறது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் அரசியல் கைதிகள் மீது சித்திரவதைகளும் கண்காணிப்புக்களும் தொடர்கின்றன. மறுபுறத்தில் சிங்கள படைகளைச் சேர்ந்தவர்களுக்கு மன்னிப்பு அளிக்கப்படுகிறது. உள்நாட்டுப் போரில் யுத்தக் குற்றங்கள், மனிதத்தன்மைக்கு எதிரான மீறல்களைப் புரிந்தவர் என்று பகிரங்



கமாக அறியப்பட்ட சவேந்திர சில்வா நாட்டின் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார் இவ்வாறு அந்தக் கடிதத்தில் பல விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடு என்ற வகையில் இலங்கையில் உண்மையான நீடித்த பகிர்ந்து கொள்ளப்பட்ட அமைதியின் வெற்றிக்கு பிரான்ஸ் தனக்கிருக்கும் அனைத்து செல்வாக்குகளையும் பயன்படுத்தி அவசரமாக உதவ வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களது கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம)

# சங்கிலி அறுத்த இருவருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, ஜன. 23

வீதியில் நின்ற பெண்ணிடம் 3 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அபகரித்த மிருசுவில் பழைய வாய்க்காலைச் சேர்ந்த இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக வீதியில் சென்ற பெண் அணிந்திருந்த நான்கு பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துத் தப்பியோடியுள்ளனர். மோட்டார் சைக்கிள் இலக்கத்தைக் குறித்துக்கொண்ட பெண் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக நேற்றுமுன்தினம் மிருசுவில் பழைய வாய்க்கால் பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். திருடப்பட்ட தங்கச் சங்கிலியும் மீட்கப்பட்டது. கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (ப-9)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் கதவடைப்புப் போருக்குத் திட்டம்



யாழ்ப்பாணம், ஜன. 23

கறுப்புக்கொடிகளுடன் வந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று இந்திய மீனவர்கள் அறிவித்துள்ள நிலையில், அவர்களின் அத்துமீறல் மீன்பிடி நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கில் கதவடைப்புப் போராட்டம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள், வெகுஜன அமைப்புக்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் மாவட்ட சம்மேளனத்தின் அனைத்து சமாசங்கள் உட்பட்ட பிரதிநிதிகளுடன் முன்னெடுக்கவுள்ள கலந்துரையாடலை அடுத்து கதவடைப்பு குறித்த திகதி தீர்மானிக்கப்படும் என்று வடக்கு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் வடமராட்சி சமாசம் சார்பாக முடிவெடுக்கப்பட்டது. (ம)

# நிலாவரையில் இருந்தும் புத்தர் வெளிவர வாய்ப்பு

## சிவாஜிலிங்கம் அச்சம்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ்ப்பாணம் நிலாவரையில் இருந்து இன்னும் சில நாள்களில் புத்தரோ அல்லது பிறிதொன்றோ வெளிவரலாம் என்று தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையை ஒரு சிங்கள நாடாகக் காட்டுவதற்குரிய முயற்சிகள் தீவிரம் பெற்றிருக்கின்றன. தமிழர்களுடைய பாரம்பரிய நிலங்கள் பறிக்கப்படுவது மாத்திரம் அல்ல மத அடையாள சின்னங்கள் சிதைக்கப்பட்டு பௌத்த மத சின்னங்கள் புகுத்தப்படுகின்ற நிலைமையை நாங்கள் பார்க்கின்றோம். இதற்கு நிச்சயமாக எங்களுடைய தமிழர் தரப்பில் இருந்து மிகப்பெரிய அளவிலான ஒரு எதிர்ப்பு இயக்கம் இல்லாமல் இருப்பது பெரிய குறைபாடு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேய்ச்சல் தரை, திருகோணமலை மாவட்டத்தில் கன்னியா வெந்நீர் ஊற்று மற்றும் தென்னைமரவாவடி, மன்னார் மாவட்டத்தில் பல இடங்கள் என தொல்பொருள் திணைக்களத்தினரின் அடாவடி நடவடிக்கைகள் தொடர்கின்றன.

எங்களுக்கு இன, மத வெறி இல்லை. நீங்கள் சிங்கள பௌத்த நிகழ்ச்சி நிரலுக்கு கீழ் எங்களை ஆக்கிரமிக்க முயற்சிப்பதால் தான் நாங்களும் எதிர்க்கின்றோம்.

யாழ்ப்பாணம் நிலாவரையில் நேற்றையதினம் தொல்பொருள் ஆய்வு என்ற போர்வையில் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். சிவில் உடையில் வந்த இராணுவத்தினர் தான் இந்த அகழ்வுப் பணிகளை முன்னெடுத்தனர். குறித்த இடத்தில் இருந்து இன்னும் சில காலத்தில் புத்தரோ அல்லது வேற ஏதோ வெளிவரலாம் என்றார். (ம-20)

# கொரோனாத் தடுப்பூசி: ஒத்திகை இன்று

கொழும்பு, ஜன. 23

கொரோனாத் தடுப்பூசிகளுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ள நிலையில், தடுப்பூசிப் பாவனை தொடர்பில் ஒத்திகைகள் இன்று மூன்று இடங்களில் இடம்பெறவுள்ளன.

பியந்தல ராகம மருத்துவமனை உள்ளிட்ட இடங்களில் இந்த ஒத்திகை நடத்தப்படும். தடுப்பூசி யைப் பயன்படுத்தப்படும்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைக் கையாள்வது தொடர்பில் இந்த ஒத்திகையில் கவனம் செலுத்தப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (ம)

# தம்மிக்கவின் மருந்துப் பாணிக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்புமில்லை

## கூறுகிறார் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி

கொழும்பு, ஜன. 23

தம்மிக பண்டார தயாரித்த மருத்துவ பானம் கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் என அரசு குறிப்பிடவில்லை. பானத்தை அவர் தனிப்பட்ட முறையிலேயே பகிர்ந்தளிக்கிறார். இதற்கும் அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது' என்று ஆயுள்வேத மருத்துவ முறைமை மற்றும் ஆயுள்வேத வைத்தியசாலை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தம்மிக பண்டார தயாரித்த மருத்துவ பானம் கொவிட்19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் என்று அரசாங்கம் குறிப்பிடவில்லை. பானத்தை பகிர்ந்தளிப்பதற்கு அனுமதியும் வழங்கவில்லை. சாதாரண ஆயுர்வேத மருத்துவப் பானம் என்ற அடிப்படையிலேயே அவர் மக்களுக்குப் பானத்தை பகிர்ந்தளிக்கிறார்.

விஞ்ஞான அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். கொவிட்-19 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு ஆயுள்வேத முறைமையில் தற்போது சிகிச்சை வழங்கப்படுகிறது. தேசிய வைத்திய முறைமையை மேம்படுத்த அரசு முன்னுரிமை வழங்கும். தேசிய மட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சிகிச்சை முறைமை கொவிட்-19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் என்றால் அதனை அரசாங்கம் கட்டாயம் அங்கீகரிக்கும் என்றார். (ம-ஐ)

# நீதிமன்ற உத்தரவுகளால் நாட்டை ஆள அரசு முயற்சி

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜன.23**
**மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசால் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பது நிரூபணமாகியுள்ளதுடன், அரசு நீதிமன்ற உத்தரவுகளால் நாட்டை ஆள்வதற்கு முயற்சிக்கிறது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அயலகத்துக்கு முதலிடம் என்ற கொள்கையில் இந்தியா செயற்பட்டாலும் கொவிட்19 தடுப்பூசியை நட்பு நாடுகளுக்கு வழங்கும் திட்டத்தில் முதல் 9 நாடுகளுக்குள் இலங்கை இல்லாமை கவலையளிக்கிறது.
இதற்கு அரசின் பொறுப்பற்ற தன்மையே காரணமாகும். இந்தியாவின் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதற்காக அயல் மற்றும் முக்கிய நட்பு நாடுகளிலிருந்து பிரதமர் மோடியின் அரசுக்கு பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் தடுப்பூசிகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் தடுப்பூசி உற்பத்தி மற்றும் விநியோகத்திறனைப் பயன்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டுக்கு அமைவாகவும், கொவிட் தொற்றுநோயை எதிர்த்துப் போராட அனைவருக்கும் உதவும் வகையிலுமே இந்தத் திட்டம் அமைகிறது.
ஆனால் இலங்கை வெறுமனே வாய் மூலமாக வீராப்பு பேசுகிறது. மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசால் நிர்வகிக்க எதுவும் முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது. இதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல எதிர்க்கட்சி முயற்சிக்கையில் அதற்கு எதிராக அடக்குமுறைகளை பிரயோகிப்பது மாத்திரமன்றி, நீதிமன்ற உத்தரவுகளால் நாட்டை ஆள்வதற்கு முயற்சிக்கின்றனர்- என்றார். (ஐ-இ)



கொரோனாச் சிகிச்சை நிலையத்தில்

# நீராட்டு விழா

கொழும்பு, ஜன.23
எம்பிலிபிட்டி யோதகம கொரோனாச் சிகிச்சை மையத்தில் சகோதர இனத்தைச் 13 வயதுச் சிறுமி ஒருவருக்கு பூப்புனித நீராட்டு விழா நடத்தப்பட்டுள்ளது.
இது தொடர்பாக குறித்த சிறுமியின் தாய், தாதி ஒருவருக்கு தகவல் தெரிவித்ததையடுத்து, அந்த தாதி ஏனைய தாதிகளுக்கு இந்த தகவலை தெரிவித்து அவர்களின் உதவியுடன் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப)

# நிலக்கரி விலைமனு கோரலில் மோசடி!!



கொழும்பு, ஜன.23
நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குரிய நிலக்கரியைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரலின் ஊடாக பெரிய மோசடி இடம்பெறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
இலங்கை மின்சாரசபை, சிலோன் நிலக்கரி நிறுவனம், மின்வலு சக்தி அமைச்சு ஆகியவற்றின் மீது நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மிக முக்கிய குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருந்தார். மீண்டும் அதிக விலைக்கு நிலக்கரியைக் கொள்வனவு செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. நிலக்கரி மின் உற்பத்தி ஆலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இத்தகைய செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.
புத்தளம் மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக நிலக்கரியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதாகக்கூறி, பல தடவைகள் முறையற்ற விதத்தில் விலைமனுக்கோரல்கள் முன்னெடுக்கப்பட்டன - என்றார். (ற-இ)

## சீருடைக்கான வவுச்சர்கள்; செல்லுபடிக் காலம் நீடிப்பு

கொழும்பு,ஜன.23
2020ஆம் ஆண்டு முதலாம் வகுப்பில் இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைக்கான வவுச்சர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி வரை செல்லுபடியாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
கொரோனா தொற்றுக் காரணமாக, நாட்டில் பல பாகங்களிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து, பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டன.
தொடர்ந்து பல பகுதிகள் தனிமைப்படுத்தல் மற்றும் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டதால் பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
இதனால் மாணவர்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு சீருடைக்கான வவுச்சர்கள் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (க-இ)

# நீரிழிவுக் கழகத்தால் விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.23
யாழ்ப்பாணம் நீரிழிவு கழகத்தால் மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களிலும் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.
அந்த வகையில் கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் செயலமர்வு நடைபெற்றது. இதன்போது பிரதேச செயலக பாவனைக்காக நீரிழிவு பரிசோதனை, குருதி அழுத்தம், உடல் திணிவுச் சுட்டி ஆகியவற்றைப் பரிசோதிக்கும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ)



## சஜித்துடன் சங்கமித்தார் மூத்த அரசியல்வாதி

கொழும்பு, ஜன.23
முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமான அருண தீபால் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்து ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துகொண்டார். நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.
அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியான அருண தீபால், ஹொரணை தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி பிரதான அமைப்பாளராகவும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்கிறதாம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

அனைத்துப் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பிலும், ஆழமான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது;
உயிர்த்த ஞாயிறு தினத்தின் தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன . 8 இடங்களில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான குற்றவியல் விசாரணைகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. முழு பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து ஆழமான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி இந்த பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் மொத்தமாக 268 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அதில் 195 பேர் தற்போது விளக்கமறியலில் உள்ளனர். ஏனைய 73 பேரும் தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இடம்பெறும் பிரதான விசாரணைகளை முன்னெடுக்கும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரின் பொறுப்பில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் என்றார். (ஐ-இ)

# மீனவர்கள் சாவுக்கு இந்தியா கண்டனம்

**கொழும்பு, ஜன. 23**

**இலங்கைக் கடற்பரப்பில் இந்தியாவிலிருந்து வந்து தொழிலில் ஈடுபட்ட 4 மீனவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தனது அதிருப்தியை இந்திய அரசு பதிவு செய்துள்ளது.**

இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கவலையையும் அதிருப்தியையும் வெளியிட்டுள்ளது.

'நெடுந்தீவுக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் கடற்படையினரின் படகுடன் மீனவர் படகொன்று மோதி விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பாக டில்லியிலுள்ள இந்தியாவுக்கான இலங்கை தூதரகத்திடம் இந்திய அரசு தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது. இவ்வாறான உயிரிழப்பு இடம்பெற்றமை குறித்து இந்தியா மிகவும் வருத்தமடைகின்றது. இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக இரண்டு நாடுகளின் அரசுகளுக்கும் இருக்கின்ற புரிந்துணர்வு பேணப்பட வேண்டும். இந்த விடயத்தை மனிதாபிமான ரீதியாக அணுகித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மீண்டும் இத்தகையதொரு சம்பவம் பதிவாகாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும்' என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ.இ)

## 1000 ரூபா அதிகரிப்பை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

கொழும்பு. ஜன.23

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்கள் மத்திய நிலையமும், பொது அமைப்புகளும் ஒன்றிணைந்து, சுகாதார வழிமுறைகளைப் பேணியவாறு இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தன. (ந)




## கொரிய நிறுவனங்களால் இராணுவத்துக்கு அன்பளிப்பு

கொழும்பு. ஜன.23

கொவிட்19 பரவலைத் தடுக்கும் வகையில் முன்னணியிலிருந்து செயற்படும் முப்படை வீரர்களது செயற்பாடுகளைப் பாராட்டி இரண்டு கொரிய நிறுவனங்களால், முகக்கவசங்கள் மற்றும் ரெபிட் அன்டிஜன் பரிசோதனைப் பொருள்கள் இராணுவத்தினருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

முப்படையினரின் பயன்பாடுகளுக்காக வழங்கப்பட்ட 25 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த நன்கொடைப் பொருள்களில் 8 ஆயிரம் முகக்கவசங்கள் மற்றும் கொவிட்19 நோயறிதலுக்கான 10 ஆயிரம் ரெபிட் அன்டிஜன் பரிசோதனை பொருள்கள் என்பவை உள்ளடங்கியுள்ளன. இராணுவ தலைமையகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நன்கொடையளிக்கும் நிறுவனங்களின் உள்ளூர் பங்காளர்கள் கலந்து கொண்டனர். (ந)

## தப்பி ஓடிய தொற்றாளர் மடக்கிப் பிடிப்பு

கொழும்பு. ஜன.23

கட்டுநாயக்க, வலானகொட பகுதியில் தப்பியோடிய கொரோனா தொற்றாளர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியிலுள்ள தற்காலிக தங்குமிடத்தில் வசிக்கும் 25 வயதுடைய இளைஞர் ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட நிலையில், இவரை சிகிச்சை நிலையத்துக்கு அழைத்து செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போதே அவர் தப்பிச்சென்றுள்ளார்.

தப்பிச்சென்ற குறித்த இளைஞனை கட்டுநாயக்க 18வது கட்டை பகுதியில் வைத்து பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட இளைஞனுக்கு எதிராக, தனிமைப்படுத்தல் நிறைவடைந்ததும் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-இ)

## ஒன்லைனில் உரையாட கைதிகளுக்கு வசதிகள்

கொழும்பு, ஜன.23



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகள் 'ஒன்லைன்' (Online) ஊடாக தமது உறவினர்களுடன் உரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கைதிகளின் உறவினர்கள் சிறைச்சாலைகளுக்கு வருவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தநிலையிலேயே தற்போது குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-இ)

# அமைச்சர்கள் சிலர் இரகசியமாக தடுப்பூசி போட்டுக் கொண்டார்களா?

## சந்தேகம் எழுப்புகிறார் லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி.

கொழும்பு, ஜன. 23

அமைச்சர்கள் சிலர் வெளியில் கூறாமல் இரகசியமாகத் தடுப்பூசிகளை போடுகின்றனர் எனக் கூறப்படுகிறது. அதனால் தான் அவர்கள் அச்சமின்றி பல்வேறு இடங்களுக்கும் செல்கின்றனர். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு மீண்டும் விமான நிலையத்தை திறப்பதன் மூலம், கொரோனாவால் உயிரிழப்பவர்கள் உயிரிழக்கட்டும். வாழ்பவர்களுடன் ஆட்சியை முன்னெடுத்துச் செல்வோம் என்ற போக்கில் செல்வதையே காண்பிக்கிறது. தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கு உலக வங்கியிடம் அரசு கடன் கேட்கிறது. இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

**அரசமைப்பு**

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக அரசால் நியமிக்கப்பட்டுள்ள குழுவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பரிந்துரைகளை முன்வைக்குமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளின் மூலமும், குழுவில் அங்கத்துவம் பெறுகின்ற சட்டத்தரணிகளினூடாக மாத்திரம் புதிய அரசமைப்பை உருவாக்க இடமளிக்க முடியாது. நாட்டு மக்கள் அனைவரின் விருப்பு வெறுப்புகளுக்கு அமையவே அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

சோல்பரி அரசமைப்பு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு, அதில் சிறுபான்மையினர் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உறுப்புரை உள்ளடக்கப்பட்டிருந்தது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இரண்டு அரசமைப்புக்கள் உருவாக்கப்பட்ட போதிலும், அவை இரண்டுக்குமே சிறுபான்மையினரின் ஆதரவு



கிடைக்கவில்லை. அனைத்து இன மக்கள் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக மாறி புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டும். இவ்வாறான எமது நிலைப்பாடுகளை உள்ளடக்கி நாம் அரசுக்கு கடிதம் அனுப்புவோம். நாடாளுமன்றத்தினூடாக செய்து முடிக்கக் கூடிய விடயத்தை அரசு தமக்கு நெருக்கமான சட்டத்தரணிகள் ஊடாக செய்ய முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு ஒருபோதும் எம்மால் இடமளிக்க முடியாது - என்றார். (ஒ.இ)

கொரோனா தடுப்பூசி

## சட்டமா அதிபரிடம் ஆவணங்கள் சமர்ப்பிப்பு

கொழும்பு. ஜன.23

இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள கொரோனாத் தடுப்பூசியை இலங்கைக்கு இறக்குமதி செய்வது தொடர்பான ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக குறித்த ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வினை விதைத்தால்...!

'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப்படக்கு என்று அடிக்குமாம்' இது தமிழ்க் கிராமங்களில் வழக்கிலுள்ள ஒரு பழமொழி. மற்றவர்களுக்குப் பிரச்சினைகள் வரும்போது 'அது எம்மைப் பாதிக்காத வரையில் நமக்கென்ன?' என்று கண்டும்காணாது அலட்சியம் காட்டுபவர்கள், பலவேளைகளில் அந்தப் பிரச்சினைகளை உருவாக்கும் நபர்களுடன் சுயநலநோக்கில் தாமும் பங்காளிகளாகச் செயற்படுவர். ஆனால் அதே நபர்களால் தமக்கும் அதே பிரச்சினை ஏற்படும்போது எப்படித் துடிப்பார்கள்? எப்படிப் படபடப்பார்கள்? என்பதற்கு, முன்னாள் அமைச்சரும் இப்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் சிறந்த உதாரணம்.

இன்றைய பொதுஜன பெரமுனவின் ஆட்சியில் சிறுபான்மை இன மக்கள் வேதனையின் உச்சக்கட்டத்தில் வாழ்வதை உலகறியும். இந்த ஆட்சியில் சிறுபான்மையினத்தவர் மீதான அடக்கு முறைகள் என்றுமில்லாதவகையில் அதிகரித்துவிட்டன என்று உணர்வாவே சக்குரல் எழுப்பும் ரிஷாத் பதியுதீன், தானும் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்பதை இப்போதாவது புரிந்து கொண்டுள்ளார் என்பது நிறைவுதரும் விடயமே. அதை அவரை உணர வைத்துள்ள ராஜபக்ச அணியினருக்கு அவர் நன்றி சொல்லத்தான் வேண்டும்.

கடந்த காலங்களில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த பேரினவாதக் கட்சிகளுடன் அமைச்சுப் பதவிகளை வகித்து அதிகாரம் செய்து, அரசியல் நகர்வுகளை முன்னெடுத்த காலங்களில் ரிஷாத் பதியுதீன் ஆளும் பேரினவாத சமூகத்தின் பிரிக்க முடியாத ஓர் உறுப்பினராகவே தன்னை இனம்காட்டி செயற்பட்டார் என்பதை உலகறியும்.

காலமாற்றமோ, அரசியல் சூழல் மாற்றமோ ஈஸ்டர் தாக்குதலின் பின்னரான நிகழ்வுகள், ஒட்டுமொத்த இஸ்லாமிய இனத்தவரையே குற்றவாளிகளாகப் பார்க்க வைத்தன. பௌத்த சிங்களப் பேரினவாதம் எத்தகைய கொடூரமானது என்பதை முஸ்லிம்கள் புரிந்து கொள்ளக்கூடிய சூழல் உருவானதை ஒரு காலத்திருப்பமென்றே சொல்லலாம்.

இஸ்லாமிய, மலையகத் தமிழர்களின் பின்புல ஆதரவுடன் அதுவரை ஆட்சிப்பீட அதிகாரத்தைக் கைப்பற்றிய வரலாற்றைக் கொண்டவர்களை, நடந்து முடிந்த தேர்தலில் தன்னந்தனியான அறுதிப்பலத்துடன் பெரும்பான்மையினத்தவர்கள் ஆட்சிப் பீடமேற்றினர். அதனால் இனிமேலும் சிறுபான்மையினரை ஆட்சியமைக்க நம்பிக்கொண்டிருக்கத் தேவையில்லை என்ற நிலை உருவாகிவிட்டதாலேயே தொடர்ந்தும் முஸ்லிம்கள் மீதான ஒடுக்குதல்கள் தொடர்கின்றன.


ராஜபக்சக்களின் ஆட்சி வெளிப்படையாகவே தனிப் பௌத்த சிங்கள ஆட்சியாக உத்தியோகபூர்வமற்ற வகையில் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டபோது, இந்த நாட்டில் பெரும்பான்மை இனமத அடையாளத்தை கொண்டிராதவர்கள் அனைவருமே சிறுபான்மைத் தமிழராகவே முத்திரை குத்தப்பட்டனர்.

போர்க்காலத்தில் இஸ்லாமிய சகோதரர்களில் பெரும்பான்மையோர் தாம் பேரினவாத ஆதிக்க சக்திகளின் செல்லப்பிள்ளைகளாக நினைத்துப் பதவிக் கதிரைகளில் அயர்ந்து தூங்கினர். தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அனைத்துக் கொடுமைகளையும் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையாக அர்த்தப்படுத்தி அரசுக்கு, மௌனமாகத் தலையசைப்பு அங்கீகாரத்தை வழங்கி வந்தனர் என்பது வரலாறு. தமிழர்களைப் பிரித்தாளும் பேரினவாதத் தந்திரோபாய நிலையை ஆதரித்ததன் விளைவை இஸ்லாமியச் சகோதரர்கள் இப்போது அனுபவிப்பதோடு அதனைக் கண்கூடாகப் பார்க்கும்போது தான், அந்த நிலைமையின் ஆபத்தையும் அவர்களால் புரிந்துகொள்ள முடிகிறது.

அரசு சிறுபான்மை மக்களுக்கு எதிராகச் செய்யும் அனைத்துச் செயற்பாடுகளும் இஸ்லாமிய இனத்தவரையும் என்றைக்காவது ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கவே செய்யும் என்ற உண்மையை உணர்ந்துகொள்வதும் ஒரு வரலாற்றுத் தேவையாகும். இந்த நிலையில் சிறுபான்மை இனத்தவர்களின் தலைவர்கள் என்று கூறிக் கொள்வோர் தமது அரசியல் சுயநலன்களுக்கப்பால் ஒன்றுபட்டுத் தமது உரிமைகள், விடயங்களில் ஒருமித்த சிந்தனையுடன் செயற்படவேண்டும். இல்லாதுவிடின் சிறுபான்மை மக்கள் அனைவரது சுதந்திர இருப்பு என்பது இந்த நாட்டில் கேள்விக்குறியாகிவிடும். சிறுபான்மை இனத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் வேதனைகளைத் தீர்க்கவும் இன, மத அடிப்படையிலான கட்சிகளின் அரசியல் நகர்வுகள் ஒருபோதும் உதவப் போவதில்லை.

அதற்கப்பால் தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தவரின் உரிமைகளையும், தீர்வுகளையும் அரசியல் போராட்ட நகர்வுகளின் மூலமே வென்றெடுக்க முடியும். ரிஷாத் பதியுதீன் போன்றவர்கள் இதனை அவர் சார்ந்த சமூகத்தவர்களுக்கு உணர்த்த வேண்டிய காலம் இதுவேயாகும்.

### இன்றைய கருத்தோவியம்




# நிறைவேற்று அதிகாரத்திடம் சரணடையாது ஜனநாயகம்

## ட்ரம்பின் வெளியேற்றம் தொடர்பில் மனோ எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 23**



**நிறைவேற்று அதிகாரம், நாடாளுமன்றம், நீதித்துறை, ஊடகத்துறை ஆகியவை ஒன்றை ஒன்று திருத்தி, கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருமே தவிர, இலங்கையைப் போல கூட்டுச் சேர்ந்து கும்மாளம் அடிக்காது என்பதை அமெரிக்கா நிரூபித்துவிட்டது என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அமெரிக்க ஜனநாயக தேச அமைப்பின் ஏனைய தூண்கள், 'ஆம் ஐயா' (யெஸ் சேர்) என்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் சரணடையவில்லை. நீதித்துறையும், நாடாளுமன்றமும், ஊடகத் துறையும் ஜனாதிபதி ட்ரம்பை வெளுத்து வாங்கி வெளியேற்றி உள்ளன. இன்று 'ஜனாதிபதி ட்ரம்ப்' தோற்றுப்போய் அவமானப்பட்டு வெளியேறியுள்ளார். அமெரிக்காவின் ஜனநாயக அமைப்பு வென்றுள்ளது.

அமெரிக்காவின் தேர்தலை, அடுத்த ஆட்சி மாற்ற குளறுபடிகளை பார்த்து, இலங்கையின் பல பேரினவாத அறிவாளிகள் அமெரிக்காவை எள்ளி நகையாடத் தொடங்கினர். அமெரிக்காவை விட தங்களை, மிகப்பெரும் ஜனநாயகவாதிகளாக காட்ட முற்பட்டனர். உலகுக்கு அறிவுரை கூற அமெரிக்கா தகுதியற்றது எனக்கூறி தங்களது இனவாத அட்டூழியங்களுக்கு நியாயப்பாடுகளை தேட முற்பட்டனர்.

இன்று இவர்களுக்கு, நெற்றியில் செருப்பால் அடித்ததைப் போல் அமெரிக்க ஜனநாயக அமைப்பு தலை நிமிர்ந்து நிற்கிறது.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு வெளியுறவு கொள்கைகள் தொடர்பான எங்களது கருத்து முரண்பாடுகள் அப்படியே இருக்க, அமெரிக்காவின் இந்த உள்நாட்டு ஜனநாயக வெற்றியை நாம் பாராட்டுகிறோம். இப்போது இந்த இடைக்காலத்தில், அமெரிக்காவை விமர்சித்த இலங்கை இனவாத வீரர்களை தேடுகிறோம் அவர்களைக் காணவில்லை - என்றார். (ஒ.இ)

## 'லைசன்ஸ்' செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

கொழும்பு.ஜன.23

காலாவதியான சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

காலாவதியாகும் திகதியிலிருந்து எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி வரை அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்த முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## 22 இலங்கையர் கொரியா பயணம்

22 இலங்கையர்களைக் கொண்ட முதல் குழுவினர் வேலைவாய்ப்புக்காக தென்கொரியாவுக்கு நேற்றுப் பயணித்தனர்.

இவர்கள் 48 மணி நேரத்துக்கு முன்னர் இலங்கையில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். மேலும் தென்கொரியாவில் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். கொவிட்19 பரவலைத் தடுக்க கொரியக் குடியரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின்படி, கொரியாவுக்குள் நுழையும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் செல்லுபடியாகும் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை சமர்ப்பித்தல் கட்டாயமாகும். அதனடிப்படையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். (க-இ)

# குருந்தூர் மலையில் புத்தர் சிலை;
# கரைதுறைப்பற்று பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்

**முல்லைத்தீவு, ஜன.23**

**குருந்தூர் மலையில் உள்ள ஆதி ஐயனார் சூலம் பிடுங்கி எறியப்பட்டமை, அங்கு புத்தர் சிலை வைக்கப்பட்டமை மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் தொல்லியல் திணைக்களத்தினர் அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுகின்றமை போன்றவற்றைக் கண்டித்து முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் தவிசாளர் க.தவராசா தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்விலேயே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தோடு சபை அமர்வின் ஆரம்பத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளி வாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்டமையைக் கண்டித்து சபையில் பெரும்பான்மை இன உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து உறுப்பினர்களும் எழுந்து நின்று மெழுகுவர்த்தி ஏற்றி இரு நிமிடங்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்த அமர்வில் வீதிகளின் சீரமைப்பு, மின்சாரம் விநியோகம் போன்ற விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டன. (ப-ரி2)

## கொள்ளை சந்தேகநபர்கள் 5 பேர் கைது

முல்லைத்தீவு, ஜன. 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வள்ளுவர்புரத்தில் வீடொன்றில் கொள்ளையிட முயன்றபோது 5 பேர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். ஏற்கனவே வீடுகளில் பணம், நகை பெறுமதியான பொருள்கள் என்பவை இவர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன என குற்றம் சுமத்தப்படுகின்றது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனொருவனும், வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த நான்கு இளைஞர்களுமே கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். (ஒ-19)

## நேர்முகத் தேர்வுக்கு குவிந்த பயிலுநர்கள்

வவுனியா, ஜன. 23

நில அளவைத் திணைக்களத்தால் வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்ட நேர்முகத்தேர்வில் பலர் கலந்துகொண்டனர்.

இலங்கை நிலஅளவை திணைக்களத்தின் கள உதவியாளர்களின் பயிற்சிக்கான தேசிய தொழில் தகுதி 2 பயிற்சி பாட நெறித் தேர்வுக்கான நேர்முகத் தேர்வுகள் வவுனியா பூங்காவீதியில் அமைந்துள்ள பிரதேச நில அளவை திணைக்களத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்டோர் அதில் கலந்துகொண்டனர். (ஒ-110)

## கராத்தேயில் இரண்டாமிடம்



இணையவழி மூலம் நடைபெற்ற அகில இலங்கை தேசிய மட்ட கராத்தே போட்டியில் 35 வயதுப் பிரிவில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வல்லிபுரம் கிருஸ்ணவேல் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளார். (ஐ)



## தொழில் தேடுவோருக்கு நிறுவனங்களில் வேலை

### முல்லையில் செயற்றிட்டம் ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜன.23

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம், மனித வள அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு தனியார் நிறுவனங்களில் உள்ள வேலை வெற்றிடங்களுக்கு தொழில் நாடுவோரை வழங்கும் செயற்றிட்டத்தை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளது.

செயற்றிட்டத்தின் முதல் கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் தனியார் துறை நிறுவனங்களில் உள்ள பணி வெற்றிடங்களை இனங்காணும் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதனூடாக பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் தொழில் நாடுவோரது விபரங்கள் பதிவு செய்யப்படவுள்ளதுடன், தனியார் துறையில் வேலை வெற்றிடங்கள் உள்ள நிறுவனங்கள் இனங்காணப்பட்டு அவை சார்ந்த விவரங்கள் தொகுக்கப்படவும் உள்ளன.

பின்னர் தொழில் நாடுவோரை இந்த வெற்றிடங்களுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும், தொழில் வழிகாட்டல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த நடவடிக்கைகள் இணையப் பயன்பாட்டுடனும், உயர் தொழில்நுட்பப் பயன்பாட்டுடனும் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-115)

## 20 பேருக்கு தொற்று;
## மீண்டும் முடங்கியது வவு. பட்டாணிச்சூர்




வவுனியா.ஜன.23

வவுனியா பட்டாணிச்சூரின் ஒரு பகுதி மீண்டும் முடக்கப்பட்டுள்ளது என்று நேற்று முன்தினம் சுகாதாரப் பிரிவினர் அறிவித்தனர்.

அங்கு 20 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையிலேயே அந்தப் பகுதி மீண்டும் முடக்கப்பட்டுள்ளது. வவுனியா பட்டாணிச்சூரைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த கிராமம் கடந்த நான்காம் திகதி முடக்கப்பட்டிருந்தது.

தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணிய பலருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இதனை அடுத்து குறித்த கிராமம் முடக்கப்பட்டது. 14 நாள்கள் கடந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இப் பகுதி முற்றாக விடுவிக்கப்பட்டது.

எனினும் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக வெளியாகியிருந்த பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகளின் பிரகாரம் குறித்த பகுதியைச் சேர்ந்த 20 பேருக்கு தொற்று இருக்கின்றமை மீண்டும் உறுதிசெய்யப்பட்டிருந்தது. இதனையடுத்து பட்டாணிச்சூர் கிராமத்தின் 1ஆம்,2ஆம்,3ஆம் ஒழுங்கைகள் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியிலிருந்து முடக்கப்பட்டு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. குறித்த பகுதிக்குள் எவரும் நடமாட முடியாதபடி இராணுவம் மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (ப-110)





கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால், மாவட்டச் செயலர் தலைமையில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குருதித் தான நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலக ஊழியர்கள் குருதித்தானம் வழங்கினர். (ப-6)

## இன்றைய நாள்

**மேடம்:** பெண்கள் சவாலான செயல்கள் செய்து பெருமிதம் அடைவீர்கள். மனப்போராட்டங்கள் ஓயும். தடைப்பட்ட வேலைகளை முடிப்பீர்கள். எதிர்பார்த்த பணம் கிடைக்கும்.

**இடபம்:** வெளிவட்டாரத்தில் உங்களின் மதிப்பு, மரியாதை கூடும். கடினமாக உழைத்தே எதையும் சாதிக்க வேண்டிவரும். தொடர்பற்ற பழைய நண்பர்கள் மீண்டும் இணைவார்கள்.

**மிதுனம்:** பகைத்த சொந்தபந்தங்கள் உங்களைத் தேடி வருவார்கள். பல காலம் திட்டமிட்டபடி புதிதாக வாகனம் வாங்குவீர்கள். வீட்டுப் பராமரிப்புச் செலவுகள் குறையும்.

**கடகம்:** சேமிப்புக் கூடும். வியாபாரத்தில் புதியவர்களின் அறிமுகம் ஏற்படும் . உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** உங்களை எதிர்ப்போரிடம் கூடக் கனிவாகப் பேசி நல்ல பெயர் எடுப்பீர்கள். உறவினர்களிடம் பக்குவமாக நடந்து கொள்வது நன்மை அளிக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும்.

**கன்னி:** பொது நல விஷயங்களில் ஈடுபடுவீர்கள். உங்களின் வரவு உயரும். அலுவலகத்தில் எதிர்பாராத நபருடைய சந்திப்பு நிகழும் நாள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவீர்கள்..

**துலாம்:** பிறருடன் வீண்விவாதங்களை தவிர்த்து நிம்மதி காண்பீர்கள். உறவினரால் ஏற்பட்டிருந்த பிரச்சினை நீங்கும். நிம்மதி ஏற்படும். சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்** சிலருக்கு மனதில் சிறுசிறு குழப்பங்கள் தோன்றி மறையும். தாயாரின் உடல்நலன் நன்றாக இருக்கும். சேமிப்பு கூடும். தொடங்கும் முயற்சி இழுபறியானாலும் அனுகூலமாக முடியும்..

**தனுசு** பிள்ளைகளுடன் அதிக கண்டிப்பின்றி நடந்துகொள்ள முயலுங்கள். வாழ்க்கைத் துணையால் வெற்றியும், மகிழ்ச்சியும் உண்டாகும். முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**மகரம்** அன்றாட விஷயங்கள் ம்ாறுதலின்றி நடைபெறும் நாள். உங்களின் கடின உழைப்பால் எதிர்பார்த்ததை விட வரவு கூடும். வாழ்க்கைத்துணையின் முயற்சியால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** எதிலும் கவனமாயிருங்கள். யாரையும் அதிகம் நம்ப வேண்டாம். அலுவலகத்தில் அவசரப்படாமல் செயற்படுங்கள். நண்பர்கள் உதவுவர். புதிய முதலீடுகள் வேண்டாம்.

**மீனம்:** சகோதரர்களால் நன்மையும், சங்கடமும் ஏற்படக்கூடும். குடும்பத்தினர் இடையே முன்பு இருந்ததை விட ஒற்றுமை கூடும். பிறர் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயல்படுவார்கள்

# கனடாவில் அமைக்கப்படுகின்றது முள்ளிவாய்க்கால் தூபி

றொரன்ரோ, ஜன. 23

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியொன்றை கனடாவின் பிரம்டனில் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என, அந்த மாநகரின் மேயர் பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

'இலங்கையின் இறுதிப் போரில் 75 ஆயிரம் தமிழர்கள் வரையில் இனப்படுகொலை செய்யப்பட்டனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி அழிக்கப்பட்டமை இலங்கை அரசின் கலாசாரப் படுகொலையின் ஓர் அம்சம். போரில் எவரும் கொல்லப்படவில்லை என்று காண்பிப்பதற்கு அரசு முயல்கின்றது. குருதிக் கறை படிந்த தனது வரலாற்றை வெள்ளையடிக்க இலங்கை அரசு முயல்கின்றது. ஆனால் நாங்கள் அதற்கு எதிர்மாறாகச் செய்வோம். இனப்படுகொலையை நாங்கள் மறக்கப்போவதில்லை. பாதிக்கப்பட்டவர்களை நினைவில் வைத்திருப்போம்' என்று அவர் குறிப்பிட்டார். (ஒ-இ)



# மாணவரை மோதியது ஓட்டோ

### இருவர் படுகாயம்

முல்லைத்தீவு, ஜன.23

முல்லைத்தீவு சிலாவத்தைப் பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் மாணவர்கள் இருவர் படுகாயமடைந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. மாலை நேர வகுப்பில் கலந்துவிட்டு வந்த மாணவர்களையே முச்சக்கர வண்டி மோதியுள்ளது. இதில் 13 வயதுடைய இரண்டு மாணவர்களே படுகாயமடைந்துள்ளனர். பாதசாரிகள் கடவையூடாக வீதியைக் கடக்க முற்பட்ட வேளை முல்லைத்தீவில் இருந்து சென்ற முச்சக்கர வண்டி மோதித் தள்ளியதில் விபத்து நிகழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களை மோதித் தள்ளிய முச்சக்கர வண்டி புரண்டு விபத்துக்குள்ளானதில், அதன் சாரதியும் காயமடைந்தார். எனினும் அவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (ப-19)

# நல்லூரில் பராமரிப்பற்ற காணிகள் பறிக்கப்படும்

### தவிசாளர் அதிரடி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.23

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் பராமரிப்பற்ற காணிகளை காணி உரிமையாளர்கள் பராமரிக்கத் தவறினால் குறித்த காணிகள் சபை உடைமையாக்கப்படும் என நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப. மயூரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பல இடங்களில் உள்ள காணிகள் உரிமையாளர்களால் பராமரிக்கப்படாது புற்கள் வளர்ந்து காடுகள் போன்று காட்சியளிக்கின்றன.

கு[illegible]களை பிரதேச [illegible] உறுப்பினர்களுடன் நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது டெங்கு நுளம்பு பரவும் நிலை காணப்படுகின்றது. அத்தோடு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியை தூய்மையாகவும் அழகாகவும் பேணுவதற்கு நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் பராமரிப்பின்றி கைவிடப்பட்ட நிலையில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிகளை உடனடியாக துப்பரவு செய்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் பராமரிப்பற்ற காணிகள் அனைத்தும் நல்லூர் பிரதேச சபையின் உடைமையாக்கப்படும் - என்றார். (ப-111)







# வவுனியாவில் விபத்து; வாகனங்கள் சேதம்

வவுனியா,ஜன.23

வவுனியா, புளியங்குளம் முத்துமாரிநகர் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இரு வாகனங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன. விபத்தில் உயிர்ச்சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி விளம்பர பதாகைகளை ஏற்றி வந்த கப்ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த முச்சக்கர வண்டியில் எவரும் அவ்வேளை இருக்காததால் உயிர்சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. விபத்து தொடர்பான விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-110)

# காணியற்ற அனைவருக்கும் அனுமதிப் பத்திரங்கள் கிடைக்கும்

## காணி ஆணையாளர் கீர்த்தி கமகே தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஜன.23**

**காணியற்ற அனைவருக்கும் காணி அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று காணி ஆணையாளர் கீர்த்தி கமகே தெரிவித்தார்.**





வடமாகாணத்திலுள்ள காணிப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று வடமாகாண முகாமைத்துப் பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் காணி ஆணையாளர் கீர்த்தி கமகே தலைமையில் இடம்பெற்றது. இதில் வடக்கின் ஐந்து மாவட்டங்களின் செயலர்கள், பிரதேச செயலகங்களின் செயலாளர்கள் மற்றும் மாகாண காணி ஆணையாளர்கள் கலந்துகொண்டனர். இதன்போது மாவட்டங்களில் உள்ள காணிகள் தொடர்பானபிரச்சினைகளை மாவட்டச் செயலர்கள் காணி ஆணையாளருக்கு தெரியப்படுத்தினர். அதன்பின்னர் காணி ஆணையாளர் கீர்த்தி கமகே தெரிவித்ததாவது; ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் புதிய அரசின் கீழ் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அதில் ஒரு கட்டமாக காணி அனுமதிப் பத்திரம் இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்க வேண்டுமென்று தெரிவித்ததற்கு அமைய அமைச்சரின் பரிந்துரையில், தற்போது வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் மாகாணக் காணி ஆணையாளர் அனைவரும் ஒருமித்து கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளோம். காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாத அனைவருக்கும் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பொது வழிபாட்டுத் தலங்களுக்கு பெற முடியாமல் இருந்த காணி அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன - என்றார். (ப-214,113,6)

# குளத்தின் உடைவை தடுப்பதற்கு வால்கட்டுப் பகுதி வெட்டப்பட்டது

கிளிநொச்சி, ஜன. 23

கிளிநொச்சி கந்தன் குளத்தை பாதுகாக்க நீர்பாசன திணைக்கள பொறியியலாளரின் ஆலோசனைக்கு அமைய குளத்து நீரைப் பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீர்க் கசிவை கட்டுப்படுத்த கமநல சேவைகள் திணைக்களமும், இராணுவத்தினரும், பொதுமக்களும் நேற்றுமுன்தினம் பணியில் ஈடுபட்ட போதிலும் அதனை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. இந்த நிலையில் நேற்றுக்காலை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய மற்றும், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் குளத்தைப் பார்வையிட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் த.ராஜகோபு தலைமையில் நீர்க் கசிவை கட்டுப்படுத்தும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. நீர் வெளியேற்றத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்த நிலையில் வலது கரை துருசும் திறந்து விடப்பட்டது. எனினும் நீரின் அழுத்தம் காரணமாக நீர் கசிவை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த நிலையில் அதிகாரிகளின் கண்காணிப்புக்கு மத்தியில் குளத்தின் வால் கட்டுப் பகுதி வெட்டி விடப்பட்டது. நீர் வடிந்தோடுவதால் தாழ் நிலப் பகுதி மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை தமது பாதிப்பு தொடர்பில் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-6-214)

# சாவகச்சேரியில் 57 பேருக்கு பி.சி.ஆர்.

## எவருக்கும் தொற்றில்லை

சாவகச்சேரி,ஜன.23

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் கடந்த செவ்வாய்க்கிழமை 57 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.சோதனையில் எவருக்கும் தொற்றில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது. கிழக்கு ,மேற்கு,தெற்கு மாகாணங்களிலிருந்து பயணிகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் ,மரக்கறிகள் ஏற்றி வந்த வாகனங்கள் எழுதுமட்டுவாழ் சோதனைச் சாவடியில் நிறுத்தப்பட்டு அவற்றின் சாரதிகள்,உதவியாளர்கள் மற்றும் நடத்துநர்கள் ஆகியோருக்கு எழுமாறான பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இவர்கள் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-9)

# தொழிற்றிறன், மொழிவிருத்தி பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜன.23

வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவினரால் பாடசாலைக் கல்வியை முடித்த இளையோருக்கு தொழிற்றிறன் மற்றும் மொழிவிருத்தி பயிற்சி நெறிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதில்கையடக்கத் தொலைபேசி திருத்துதல் (3 மாதம்), ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடை தயாரித்தல்-(3மாதம்), இரண்டாம் மொழி சிங்களம் (6 மாதம்) ஆகிய பயிற்சி நெறிகளே இலவசமாக வழங்கப்படவுள்ளன.

பயிற்சி பெற விரும்புகின்றவர்கள் பயிற்சி நெறியைக் குறிப்பிட்டு "வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி, பருத்தித்துறை" என்ற முகவரிக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



யாழ்ப்பாணம் தொல்புரம் மேற்கு மன்னா தோட்டம் ஜெகஜோதி அம்பாள் ஆலயத்தின் சங்காபிஷேக நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ஐ-63)

# வெள்ள நிவாரணம் வழங்கலில் பாகுபாடு

சாவகச்சேரி.ஜன.23

பொருளாதார அபிவிருத்தி அலுவலரின் அலுவலகத்துக்குச் சென்று வெள்ளப்பாதிப்பு தொடர்பாக பதிவு செய்தவர்களுக்கு மட்டும் வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. வெள்ளம் இன்னமும் காணப்படும் குடியிருப்பாளர்களுக்கு நிவாரணம் வழங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த மக்கள் இந்தப் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இங்கு 100 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. கடந்த மழை காலத்தில் வெள்ளத்தால் அனைத்துக் குடும்பங்களும் பாதிக்கப்பட்டன.

கடந்த வாரம் வெள்ள நிவாரணம் சங்கக் கடையில் விநியோகிக்கப்படும் தகவலை அறிந்த மக்கள், அங்கு சென்றபோது,35 பேருக்கு மட்டும் நிவாரணப் பொருள்கள் வந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி அலுவலரின் அலுவலகத்துக்குச் சென்று பதிவு செய்தவர்களுக்கு மட்டும் நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-9)

# ஆங்கில வகுப்புக்கு விண்ணப்பம் கோரல்

தென்மராட்சி,ஜன.23

தென்மராட்சி அபிவிருத்திக்கழக ஐக்கிய இராச்சிய கிளையால் நடத்தப்படவுள்ள இலவச ஆங்கில வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

'சூம்' வழியாக ஐக்கிய இராச்சியத்தில் இருந்து ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட ஆசிரியர்களால் இந்த வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலையில் இருந்து விலகிய எவரும் இந்த வகுப்புகளில் பங்கேற்றுப் பயன்பெறமுடியும்.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை செயலாளர், தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் - மீசாலை வடக்கு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# உக்ரைனிலிருந்து 104 பேர் வருகை

கொழும்பு,ஜன.23

உக்ரைன் நாட்டிலிருந்து சுற்றுலாப்பயணிகள் 104 பேர் நேற்று இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். இலங்கையில் சுற்றுலாப்பயணங்களை மேற்கொள்வதற்காக ஏற்கனவே ஒருகுழுவினர் வருகை தந்துள்ளனர்.

அதனடிப்படையில் நேற்று 104 பேர் மதத்தளை விமான நிலையத்தை வந்தடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## மதுபோதையில் சாரத்தியம்; ரூ.77,500 தண்டம்

சாவகச்சேரி,ஜன.23
மதுபோதையில், ஆவணங்களின்றி வாகனம் செலுத்திய சாரதி. யொருவருக்குசாவகச்சேரி நீதிமன்றில் 77 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் ஆகியவை இன்மை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் மந்திகை 75 ஆயிரம் ரூபாவும், வாகன வரிப் பத்திரம் இன்மைக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவுமாக 77 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

# வடக்கில் தொடர் மழையால் விவசாயச் செய்கை பாதிப்பு

*முல்லை மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு*



**முல்லைத்தீவு,ஜன.23**
**முல்லைத்தீவு மாவட்டத்தில் பருவகால மழை அதிகளவு பதிவானதால் விவசாயிகள் பெரிய அளவில் அழிவைச் சந்தித்துள்ளனர் என்று முல்லை மாவட்ட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் பு.உகநாதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆவணி, மற்றும் புரட்டாதி மாதங்களில் கிடைக்க வேண்டிய மழை போதியஅளவு கிடைக்கவில்லை. ஆனால் கார்த்திகை, மார்கழி மற்றும் தை மாதங்களில் அதிகளவான மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றது. விவசாயிகள் கார்த்திகை மாதத்துக்கு முன்னரே பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர்.
தொடர்ச்சியான மழையால் ஆயிரத்து 760 ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்துள்ளது. இதேவேளை உப உணவு பயிர்ச் செய்கையான உழுந்து 810 ஏக்கர், நிலக்கடலை ஆயிரத்து 390 ஏக்கர், பயறு 139 ஏக்கர், கௌபி 96 ஹெக்டயர் என்பவையும் அழிவடைந்துள்ளன.
இந்த போகத்தில் முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் பெரிய அளவில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். எனவே விவசாயிகளை அடுத்த போகத்துக்கு சிறந்த முறையில் பயிர் செய்கையை மேற்கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. என்றார். (ஐ-19)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி,ஜன.23
100 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
குறித்த பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய நபர்மீது சோதனை மேற்கொள்ளப்பட்டபோதே அவரிடமிருந்து கஞ்சா மீட்கப்பட்ட து என பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரை இன்று சனிக்கிழமை நீதிவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-113)

## இளவாலை புனித யாகப்பர் ஆலயம் தனியொரு பங்குத் தளமாக பிரகடனம்

யாழ்ப்பாணம், ஜன. 23
இளவாலை புனித யாகப்பர் ஆலயம் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் தனியொரு பங்குத் தளமாக யாழ். மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதன் மூலம் இளவாலை மறைக் கோட்டத்தின் 13ஆவது பங்குத் தளம் உதயமாகியுள்ளது.
இந்தப் பங்குத்தளத்தின் பங்குத் தந்தையாகவும் இளவாலை மறைக்கோட்டத்தின் முதல்வராகவும் அருட்பணி சி.ஜி.ஜெயக்குமார் அடிகள் தனது பணிப் பொறுப்பை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஏற்றுள்ளார்.
யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி ப.ஜெபரட்ணம் அடிகளார் முன்னிலையில் இவர் தனது பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.
இளவாலை மறைக்கோட்டத்தின் முன்னாள் முதல்வரும் முன்னாள் பங்குத்தந்தையுமான அருட்பணி ம.ஜேசுரட்ணம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ஓ.இ)



## தகவல் தொடர்பு மையமாக மாறுகிறதா தாமரைக் கோபுரம்?

தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.23
தாமரைக் கோபுரத்தை தகவல் தொடர்பு மையமாக மாற்றும் திட்டங்கள் உள்ளன. இவ்வாறு தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் உயர் அதிகாரி ஒருவர் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தாமரைக் கோபுரம் தெற்காசியாவின் மிக உயரமான கோபுரமாகவும், உலகின் மிக உயரமான கோபுரங்களின் பட்டியலில் பத்தொன்பதாவது இடமாகவும் கூறப்படுகிறது. இருப்பினும் உள்ளூர் அல்லது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் யாரும் கோபுரத்துக்கு அடிக்கடி வருவதில்லை. கொரோனா பரவல், நிலைமையை மோசமாக்கியுள்ளது. கோபுரத்தை ஒரு தகவல் தொடர்பு மையமாக மாற்றும் திட்டங்கள் உள்ளன. கோபுரத்தின் தளங்களை வாடகைக்கு எடுக்கும் திட்டங்களும் பயனற்றவை என்பதை நிரூபித்துள்ளன. இக் கோபுரத்தை நிர்மாணிக்க பெறப்பட்ட கடனுக்கான வட்டியாக ஆண்டுக்கு 560 மில்லியன் செலுத்த வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.
இதேவேளை, 2016 இல் திறக்கப்படவிருந்த கோபுரம் திறக்கப்படவில்லை. சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க ஒரு சிறப்பு சுற்றுலா மண்டலத்தை உருவாக்க அப்போதைய ராஜபக்ச நிர்வாகம் திட்டமிட்டிருந்தாலும், அனைத்துத் திட்டங்களும் ஸ்தம்பிதமடைந்தன. எவ்வாறாயினும், தாமரைக் கோபுரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் என்று இந்த விடயம் தொடர்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ந-இ)

## மன்னாரில் வாக்காளர் பதிவு நீக்கம்; ம.உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

மன்னார், ஜன. 23
மன்னார் மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்ட வாக்காளர்கள் போர் காரணமாக வேறு மாவட்டங்களில் இடம்பெயர்ந்துள்ள நிலையில், அவர்களின் பதிவுகளை மன்னார் மாவட்டத்திலிருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில், மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எச்.எம்.முஜாஹிர் முறைப்பாடு செய்துள்ளார்.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மன்னாரில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டால் அவர்கள் மீளவும் குடியமர்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள்.
வாக்காளர் பதிவுச் சட்டத்தில், வாக்காளர் ஒருவர் ஒன்றுக்கும் மேற்பட்ட சாதாரண வதிவிடங்களை கொண்டிருக்கின்ற விடத்து அவரது வாக்கை பதிவு செய்வதற்கான முகவரி எது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை குறித்த வாக்காளருக்கே உரியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த நிலையில் கிராம அலுவலர், மன்னார் பிரதேச செயலாளர் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளரால் இடம்பெயர்ந்த மக்களின் வாக்களிக்கும் உரிமையானது நிரந்தர வதிவிட மாவட்டமான மன்னார் மாவட்டத்திலும் இடம் பெயர்ந்து வாழும் மாவட்டங்களிலும் மறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மக்கள் என்னிடம் முறைப்பாடு செய்துள்ளார்கள். அவர்களது வாக்களிக்கும் உரிமையை இல்லாமல்செய்தமை மனித உரிமை மீறலாகும். வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களை மீண்டும் இணைத்துக்கொள்ள வேண்டும், என்று கோரப்பட்டுள்ளது. (ஓ.213)

## ஸ்கந்த ஹோம விழா

சாவகச்சேரி ஜன. 23
நாட்டு மக்கள் நலன்கருதியும் தற்போது பரவிவரும் கொரோனா வைரஸ் பாதிப்பிலிருந்து மக்கள் மீள அருளுமாறு வேண்டியும் கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசுவாமி கோவிலில் ஸ்கந்த ஹோம விழா வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
காலை 8 மணிக்கு ஹோம வழிபாடுகள் ஆரம்பமாகி 108 கலச சங்காபிசேகமும் இடம்பெறுமென பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.
கோவில் பிரதம குரு பிரம்மஸ்ரீ முத்துக்குமார் கணேசகுருக்கள் தலைமையில் பிரசித்தி பெற்ற சிவாச்சாரியார்களால் ஹோமக் கிரியைகள் நடத்தப்படும். கிரியைகளில் கலந்து கொள்வோர் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து பங்கு பற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

# தமிழ்த் தேசியவாதிகளின் உண்மைமுகங்கள் அம்பலமாம்!

**யாழ்ப்பாணம், ஜன. 23**

**நாங்கள் மாத்திரம் தமிழ்த் தேசியவாதிகள். நாங்கள்தான் இலங்கையில் இனப் படுகொலை இடம்பெற்றது என்பதை உலகம் முழுவதும் கூறிவந்தோம் எனக் கூறுபவர்கள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்துக்கு தமிழ் கட்சிகள் சார்பில் அனுப்பப்படும் கடிதத்தின் வரைவு தயாரிக்கின்றபோது இனப்படுகொலை என்ற சொல் லாடலை உள்ளடக்க மறுத்தது ஏன் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவருமான க.சுரேஸ்பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களுடைய தரப்பிலிருந்து இனப்படு கொலை என்பது கடிதத்தில் உள்ளடக் கப்பட வேண்டும் என்று அழுத்தம் கொடுத்த பின்னர்தான் பலருடைய உண்மையான முகங்கள் தெரிந்தன.

நாம் அடிக்கடி கூறுவது போன்று போரின்போதான குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை விசா ரிப்பதற்கு, இலங்கையில் உண்மையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ப தும் அதற்கான மூலகாரணம் யார் என் பது குறித்தும் விசாரிக்கப்படவேண்டும். அவ்வாறு நடந்தால்தான் தமிழ் மக்கள் இன்னொரு இனவழிப்புக்கு உட்படமாட் டார்கள்.

அந்தக் கடிதத்தில் இனவழிப்பு என்ற சொல்லாடல் சேர்க்கப்படவேண்டும் என் பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பின்னர் ஏற்றுக்கொண்டார். அதன் பின் னர் எம்.ஏ.சுமந்திரன், எனக்கு உடன்பா டில்லை. ஆனால் ஏற்றுக்கொள்கின் றேன், என்று கூறியிருந்தார்.

சர்வதேச குற்றவியல் பொறிமுறைக்கு, சிரியாவில் சாட்சியங்களைச் சேர்ப்பது போன்று, இலங்கை விவகாரத்திலும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக்கேட் டபோது, இதனை முன்வைத்தால் சர்வ தேச குற்றவியல் நீதிமன்றுக்கு செல்ல முடியாது. இதனைக் கைவிடவேண்டும் என்று கஜேந்திரகுமார் கூறினார்.

பின்னர் ஒரு வருட கால அவகாசத்துடன் அதற்கு அவர் இணங்கினார். இதன் பின்னர் சுமந்திரனும் இணங்கினார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஏற் றுக்கொள்வதை எவ்வாறு எம்.ஏ.சுமந்தி ரன் ஏற்றுக்கொள்கிறார் என்பது எமக்குப் புரியவில்லை.

இத்தகைய விடயங்கள் நடந்து முடிந்த பிற்பாடு கட்சித் தலைமைகளின் கையொப்பத்தில் பிரச்சினை ஏற்பட்டது. இது சிறுபிள்ளைத்தனமான செயற்பா டாகத்தான் இருந்தது. கட்சிகள் என்று பார்க்கும் போது இலங்கை தமிழ் அரசுக் கட்சி மிகப் பழமையான கட்சி. ஆயுதம் எடுத்துப் போராடியவர்கள் என்றால் ஈ.பி. ஆர்.எல்.எவ், ரெலோ, புளொட் என் பவை இருக்கின்றன. அவர்களுக்கும் பல அனுபவங்கள் உள்ளன.

இந்த நிலையில் நேற்று வந்தவர்கள் தான் கையொப்பம் இடலாம் என்றால் இது எவ்வளவு தூரம் சரியானது?

சி.வி.விக்கினேஸ்வரன், எம்.ஏ.சுமந்தி ரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம் பலம் ஆகிய மூவரும் இதனை ஏற்றுக் கொண்டார்களாம். அவ்வாறு இருந்தா லும் அதில் ஏனையவர்களை இணைப் பதில் என்ன தவறு.

இந்தக் கடிதம் தயாரிப்பதில் ஈடுபட்டவர் களை இணைத்துக் கொள்வதன் ஊடா கத்தான், அந்த ஆவணத்துக்கு கனதி கூடும். ஆனால் அவர்கள் சம்மதிக்க வில்லை. இதுதான் இவர்களின் சிறுபிள் ளைத்தனமான வேலையாகவுள்ளது. சிவில் அமைப்புக்களிலிருந்து கையொப் பத்தை பெற்றுக்கொள்ளமுடியும் என் றால் கட்சித் தலைவர்களின் கையொப் பத்தை ஏற்றுக்கொள்வதில் என்ன தவறு? என்று கேள்வி எழுப்பினார். (ஓ.20)

## இணுவை இந்து நாதம் -4 சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.23

இணுவில் இந்துக் கல்லூரியின் 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு "இணுவை இந்து நாதம் 4 "என்ற சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் வே.உதயமோகன் தலை மையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

## அலங்கார உற்சவம்

கொடிகாமம்,ஜன. 23

கொடிகாமம் சந்தை வாயில் பதி யுறை ஸ்ரீ காளிகாதேவி தேவஸ் தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். தினமும் முற்பகல் 10 மணிக்கு கும்ப பூஜையும், அத னைத் தொடர்ந்து அபிஷேகம், மூலஸ்தான பூஜைகளுடன் சுவாமி உள்வீதியுலா வருதலும் நடைபெறும். எதிர்வரும் 26 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை 108 சங்காபிஷேக மும், 108 ஹோமத் திரவியங்களா லான விஷேச யாகமும் நடைபெ றும் என்று ஆலயத்தினர் அறிவித் துள்ளனர். (ஐ-159)

## அடிப்படை வசதிகளின்றி இயங்கும் முன்பள்ளிகள்

கொடிகாமம், ஜன. 23

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள சில முன்பள்ளிகள் அடிப்படை வச திகளற்று காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வேலிகள், போதிய சுகாதார வசதி கள், மின்சார வசதி என்பவை இன்றி அந்த முன்பள்ளிகள் காணப்படு கின்றன. இதனால் அங்கு கல்வி யைத் தொடரும் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியர்கள் சிரமங்க ளுக்கு உள்ளாகின்றனர்.

எனவே இது தொடர்பில் உரிய தரப் பினர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று மாணவர்களின் பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-159)

## அணைக்கட்டுத் தொடர்பில் அச்சம்கொள்ள வேண்டாம்

### முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.23

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்புக் குளத் தின் அணைக்கட்டுத் தொடர்பாக விவ சாயிகள் அச்சம் கொள்ளத் தேவை யில்லை என முத்துஐயன்கட்டு நீர்ப்பா சனப் பொறியியலாளர் இ.ராகுலன் தெரிவித்துள்ளார்.

தண்ணிமுறிப்புக் குளக்கட்டில் நீர்க் கசிவு உள்ளது என்று விவசாயிகளால் அச்சம் தெரிவிக்கப்பட்ட நிலையில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அணைக்கட்டில் நீர்க்கசிவு இருந்த போது எமது திணைக்களத்தால் உட னேயே சீரமைப்பு வேலைகள் செய்யப் பட்டுள்ளன. இப்போது அணைக்கட்டு பாதுகாப்பானதாகவே உள்ளது.

வீணாக அச்சம் விவசாயிகள் கொள் ளத் தேவையில்லை என்று பொறியி யலாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தண்ணிமுறிப்புக் குளத் தின் கீழ் 3 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் நெற்செய்கை மேற் கொள்ளப்படுகின்றமை குறிப்பி டத்தக் கது. (ப-ரி2)




மகிழ்ச்சிகரமான கற்றல் எனும் தொனிப் பொருளிலான கண்காட்சி ஒன்று கடந்த புதன்கிழமை பளை இந்து ஆரம்ப பாடசாலையில், பாடசாலை அதிபர் க.ஞான சீலன் தலைமையில் நடைபெற்றது. (ப-159)

### சுகாதார விதிமுறை மீறல்:

# சாரதிகள் மீது சட்டநடவடிக்கை!

கொழும்பு, ஜன.23

பொதுப் போக்குவரத்து மற்றும் பாட சாலை மாணவர்களை ஏற்றிச்செல் லும் வாகனங்களில் உரிய சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படாத பட்சத் தில் வாகனச் சாரதிகள் மற்றும் வாகன உரிமையாளர்கள் மீது சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்



ளார். இந்த வாகனங்களில் உரிய சுகாதார வழிமுறைகள் பின்பற்றப்படு வதில்லை என கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை அடுத்தே இந்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரிய சுகாதார நியமங்களைப் பின்பற் றாத வாகனச் சாரதிகள் மற்றும் வாகன உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கடந்த ஒக்ரோபர் 15 ஆம் திகதி வெளி யிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய வாகன ஆசனங்களுக்கு அமைவாக மாத்திரமே பயணிகளை ஏற்றிச்செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)

# பணம் சம்பாதிப்பதே அரசின் குறிக்கோள்

## குற்றம் சுமத்துகிறார் பாலித ரங்கே பண்டார


கொழும்பு, ஜன.23

கொரோனா வைரஸ் பரவலால் நாட்டு மக்கள் நெருக்கடிக ளைச் சந்தித்து வரும் நிலை யில், அரசாங்கம் பணம் ஈட்டு வதையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பாலித ரங்கே பண் டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:

நாட்டு மக்கள் பெரும் நெருக் கடிகளை எதிர்நோக்கி வருகின் றனர். ஆனால் அரசாங் கத்தைப் பொறுத்தமட்டில் வைரஸ் பரவலையும் ஒரு வசந்தகாலமாக எண்ணியே செயற்பட்டு வருகின்றது. பி.சி. ஆர். பரிசோதனை தொடக்கம், வெளிநாட்டிலுள்ள பணியாளர் களை நாட்டுக்கு அழைத்து வருவது வரையில், அனைத்து வழிகளிலும் பணம் சம்பாதிப் பதே அரசின் குறிக்கோள் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டிலுள்ள அனைத்து இன மக்களும் ஒன்றாக இணைந்து செயற்ப டக்கூடிய ஒரு கட்சியாகவே ஐக்கிய தேசியக் கட்சி உருவாக் கப்பட்டது. தற்போதைய தலை வர் ரணில் விக்கிரமசிங்கவும் கட்சியின் வளர்ச்சிக்காவும், நாட்டுக்காகவும் பெருமளவு



உழைத்துள்ளார். இந்நிலை யில், தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான அரசாங்கமொன்றை மக்கள் எதிர்ப்பார்த்துள்ளனர். மக்க ளின் எண்ணங்களுக்கமைய எமது தலைமையில் புதிய தொரு அரசாங்கத்தை உரு வாக்குவதற்காக நாம் உறுதியு டன் உழைப்போம், எனவும் தெரிவித்துள்ளார். (ந-இ)

# அவசரகால பயன்பாட்டுக்கு ஒக்ஸ்போர்ட் தடுப்பூசி

## அனுமதி வழங்கியது இலங்கை



**கொழும்பு, ஜன.23**

**இலங்கையில் அவசரகால பயன்பாட்டுக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியைப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்தால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என இரா ஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன்ன தெரிவித் துள்ளார்.

இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதியான நோயாளி களுக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியை செலுத்து வது மிகச் சிறந்தது என அதிகாரி கள் முன்னர் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், உலக சுகாதார அமைப்பின் ஒப்புதல் மற்றும் கொள்முதல் ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே தடுப்பூசியை பயன்படுத்துவது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# பொலித்தீன், பிளாஸ்டிக் உற்பத்திகளுக்கு தடை

## அமுலுக்கு வருகிறது ஏப்ரலில்

கொழும்பு, ஜன.23

ஒருமுறை மாத்திரம் பயன்படுத்தப்படும் பொலித் தீன் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தியிலான பொருள்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து தடைசெய்யப்படவுள்ளன.

இதற்கான வர்த்தமானியில் சுற்றுலாத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர கையொப்பமிட் டுள்ளார்.

ஒருமுறை மாத்திரம் பாவனைக்கு பயன்படுத்தப் படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் உற்பத்தி யிலான பொருள்களை இம் மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து தடைசெய்யும் யோசனையை சுற்றுலாத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர கடந்த வரும் அமைச்சரவையில் முன்வைத்தார்.

தடைசெய்ய தீர்மானிக்கப்பட்ட பொலித்தீன் மற் றும் பிளாஸ்டிக் உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் இதர நடவடிக் கைகளுக்காக இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வாசனைத்திரவியங்கள் மற்றும் நீராகார பொருள்கள் அடைக்கப்பட்ட சிறு பொலித்தீன் பக்கெட், காற்று நிரப்பப்பட்ட பிளாஸ் டிக் உற்பத்தியிலான விளையாட்டுப் பொருள் கள், மைக்ரோன் 20க்கு குறைவான லஞ்சீட் ஆகிய உற்பத்திகளை ஏப்ரல் மாதத்தில் இருந்து உற்பத்தி செய்யவும், பகிர்ந்தளிக்கவும் விதிக்கப் பட்டுள்ள தடை ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ந-இ)

# கோத்தாபய ராஜபக்சவின் இருமுகங்களுமே தோல்வி

## சமிந்த சாடல்

கொழும்பு, ஜன. 23


ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இரண்டு கதாபாத்திரங்களுமே 'பெயில்' என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக் கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித் தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:

தனக்கு இரு முகங்கள் இருக்கின்றன என ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அண்மையில் கருத்து வெளியிட்டிருந் தார். அவரின் இந்த இரு கதாபாத்தி ரங்களையும் அடையாளம் காண்பது தற்போது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. நல்ல பக்கம் எது, கெட்ட பக்கம் எது என்பது தெரியாமல் உள் ளது. என்னைப் பொறுத்தவரையில் இரு காதபாத்திரங்களுமே 'பெயில்' என்றுதான் கூறுவேன்.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் பாது காப்புச் செயலர் தொடர்பில் ஒரு கருத்தோவியத்தை வரையும் சுதந்தி ரம் இருக்கவில்லை. அரசை விமர் சித்த சில ஊடகவியலாளர்களுக்கு இவ்வுலகைவிட்டே செல்லவேண்டிய அச்சுறுத்தல் நிலை ஏற்பட்டது. அத னால்தான் 2015இல் அவர்களுக்கு வீட்டுக்கு செல்லவேண்டிய நிலை ஏற் பட்டது.

தற்போதும் எதிரணியை மிரட்டி, அச்சு றுத்தல்விடுத்து மௌனிக்க வைத்து பழைய யுகத்துக்கு செல்வதற்கு முயற் சிக்கின்றனர் - என்றார். (ஒ.இ)



# நுவரெலியாவில் நிலநடுக்கம்

நுவரெலியா, ஜன.23

நுவரெலியா - வலப் பனை பிரதேசத்தை அண்மித்த பகுதியில் சிறிய அளவிலான நில அதிர்வு உணரப் பட்டுள்ளது என புவிச் சரித வியல் மற்றும் சுரங்க பணியகத்தின் தலைவர் அனுர வல் பொல தெரிவித் துள்ளார்.

மேலும், நேற்று வெள் ளிக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் இந்த நில அதிர்வு உண ரப்பட்டுள்ளது. ரிக்டர் அளவு கோலில் 1.8 ஆக குறித்த நில அதிர்வு பதி வாகியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வியலுவ எகிரிய கிராமத்திலும் குறித்த நில அதிர்வு உணரப்பட்டுள்ளது என பிரதேசவாசிகள் தெரி வித்துள்ளனர். (ந)

# விவசாயத்துறை மேம்பாட்டுக்கு சிவில் பாதுகாப்பு படையினர்

## தொடர்ந்தும் சேவையில் என்கிறார் மேஜர் ஜெனரல் நந்தன

கொழும்பு, ஜன.23

நாட்டின் அபிவிருத்தி மற்றும் விவசாயத்துறை மேம் பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்கும் வகையில் சிவில் பாதுகாப்பு படையினரைத் தொடர்ந்தும் ஈடுப டுத்த திட்டமிடப்பட்டுள்ளது என சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமான மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டுக்குத் தேவைப்படும் எந்தவொரு சந் தர்ப்பத்திலும் பாதுகாப்பு படையினருடன் இணைந்து சேவையாற்றுவதற்குத் தேவையான பயிற்சிகள், சிவில் பாதுகாப்பு படையின் நந்தமித்ர படையணிக்கு வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாய கமாக புதிதாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் நந்தன சேனாதீர, நேற்றுமுன்தினம் தனது கடமைகளை உத்தி யோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ந)

# ஏறாவூரில் முதலாவது கைத்தொழில் பூங்கா!

கொழும்பு, ஜன.23

இலங்கையின் முதலாவது ஆடைக் கைத்தொழில் பூங்கா ஏறாவூரில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இலங்கை முதலீட்டுச் சபையால் இந்த வருடம் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

275 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப் பட்டு வரும் இந்தப் பூங்காவுக்காக 30 கோடி அமெரிக்க டொலர் செலவிடப்ப டவுள்ளது.

ஆடை உற்பத்தி மற்றும் கைத்தறி உற்பத்திக்குத் தேவையான ஏனைய மூலப் பொருள் உற்பத்தியும் அங்கு மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)

## முடக்கத்தை நீக்கக்கோரி மக்கள் போராட்டம்

கொழும்பு, ஜன. 23
மொனராகலை மாவட்டத்தின் அலுப் பொத்தை கிராமத்தை 46 நாள்கள் தொடர்ச் சியாக தனிமைப்படுத்தி முடக்கியிருந்த மையைக் கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து மேலிட உத்தர வுக்கு அமைவாக பொதுச் சுகாதாரப் பிரிவி னரால் அலுப்பொத்தை கிராமம் தனிமைப்ப டுத்தலிருந்தும், முடக்கப்பட்டதிலிருந்தும் முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

## வீடொன்றிலிருந்து இரு சடலங்கள் மீட்பு!

கம்பஹா, ஜன.23
கம்பஹா பகுதியில் வீடொன்றிலிருந்து தம்பதியினர் இருவரின் சடலங்கள் மீட்கப் பட்டுள்ளன என கம்பஹா பொலிஸ் நிலை யப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.
60 வயதுடைய நபரும், 50 வயதுடைய அவருடைய மனைவியுமே இவ்வாறு உயி ரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரி வித்தனர்.
பெண்ணின் சடலத்தின் கழுத்துப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்ட, காய மொன்று காணப்படுவதுடன், அவருடைய கணவர் தூக்கிட்டு உயிரிழந்த நிலையி லேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித் தனர்.
சடலங்கள் கம்பஹா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், பொலி ஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்ற னர். (ந-இ)

## சட்ட அமைப்பில் 100 பகுதிகளில் மாற்றம் வேண்டும்

*நீதி அமைச்சர் தெரிவிப்பு*



கொழும்பு,ஜன. 23
இலங்கையில் சட்ட அமைப்பில் மாற் றத்தை ஏற்படுத்த வேண்டிய சுமார் 100 பகுதிகள் இனங்கா ணப்பட்டுள்ளன என நீதி அமைச்சர் மொஹ மட் அலி சப்ரி தெரிவித்துள்ளார். அவற்றில் 37 பகுதிகளை மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஏனைய பகுதிகளில் மாற்றங்களை பரிந்துரைப்ப தற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்த விடயத்தைத் தெரி வித்துள்ளார். அத்துடன் கடந்த வாரம் நீதி அமைச்சர், அமைச்சரவையில் பல தகவல் களை சமர்ப்பித்திருந்தார். மத மற்றும் குடி வரவு சட்டத்தின் திருத்தங்கள், சிறார்களுக்கு மரண தண்டனை தொடர்பான தண்டனைச் சட்டத்தின் பிரிவு 53, ஊழியர்களின் குறைந் தபட்ச ஊதியச் சட்டம், பணமோசடிச் சட்டம், பண மோசடி தடுப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நிதி மாநாடு ஆகியவை அதில் அடங் கியிருந்தன எனத் தெரியவருகின்றது. (வ-இ)

## கொரோனாச் சாவு அதிகரிக்க வாய்ப்பு!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை!

கொழும்பு, ஜன.23
எதிர்வரும் நாள்களில் கொரோனா வைரஸால் உயிரிழப்ப வர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லலாம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர் ஹரித அளுத்கே எச்சரிக்கை விடுத்துள்ளார்.
நாளாந்தம் 600 க்கும் மேற்பட்ட கொரோனாத் தொற்றாளர் கள் கண்டுபிடிக்கப்படுகின்ற நிலையில், கொரோனா வைர ஸால் உயிரிழந்தவர்களில் 55 சதவீதமானவர்கள் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள்ளேயே உயிரிழந்துள்ளனர் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.
கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை தற்போது அதி கரித்துச் செல்கின்ற வேளை, நாட்டின் ஏனைய பகுதிகளில் உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை களில் கவனத்தை செலுத்தவேண்டும் எனவும் அவர் தெரி வித்துள்ளார். (ந-இ)


கடற்படை படகுடன் மோதுண்டு

## இந்திய மீனவர்கள் உயிரிழப்பு; தமிழக முதல்வர் கண்டனம்

சென்னை, ஜன.23
நெடுந்தீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையின் படகுடன் இந்திய மீனவர்களின் படகு மோதி விபத் துக்குள்ளானதில் மீனவர்கள் உயிரிழந்த சம்ப வத்துக்கு தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார். அத்துடன் உயிரிழந்த நான்கு மீனவர்களின் குடும்பங்க ளுக்கு தலா 10 லட்சம் ரூபா நிவாரணமும், தகு தியின் அடிப்படையில் உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களில் ஒருவருக்கு அரச வேலையும் வழங்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.
இலங்கைக் கடற்படைதான், புதுக்கோட்டை மாவட்ட மீனவர்களின் படகு மீது மோதியது என வும், அவர்கள் மீது மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ, பா.ம.க. நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் உள்ளிட்ட தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (வ-இ)

# கொரோனா தொற்றுக்கெதிரான போராட்டத்தில் பின்னடைவு!

### அனுமதி பெறாத மருத்துவமனைகளே காரணம் என்கிறார் சவேந்திர சில்வா



**கொழும்பு, ஜன.23**
**சுகாதார அமைச்சிடம் அனுமதி பெறாத தனியார் மருத்துவமனைகள், பிராந்திய மற்றும் சிறு ஆய்வு கூடங்களில் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரி சோதனைகளை மேற்கொள்கின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் தொற்றுப் பரவலுக்கு எதிரான போராட் டத்துக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன என்று இரா ணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித் துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
பல தனியார் மருத்துவ மனை கள் ஊடாக பிராந்திய மற்றும் சிறு ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்படும் பி.சி. ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்படுபவர்களில் பலர் வைத்தி யசாலைகளில் அனுமதிக்கப்படாமல் மறைந்து கொள்கின்றனர்.
தனியார் மருத்துவமனைகள் அன்டி ஜன் மற்றும் பி.சி.ஆர் சோதனைக ளுக்கு வெவ்வேறு கட்டணத்தை அறவிடுகின்றன என்று முறைப்பாடு கள் கிடைத்துள்ளன.
கொவிட் பரிசோதனைகளை முன் னெடுப்பதற்கு தொழில்நுட்ப ரீதியாக பொருத்தப்பட்ட 30 ஆய்வு கூடங்கள் மாத்திரமே சுகாதாரத் துறையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
உக்ரைனிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு குறிப்பிட்ட சில தனி யார்துறை மருத்துவமனைகளில் பி.சி.ஆர் பரிசோதனைகளை நடத்த சுகாதார அதிகாரிகளால் அனுமதிய ளிக்கப்பட்டுள்ளது - என்றார். (ந-இ)

## தொல்பொருள் சட்டங்களை மீறிய உதயங்க மீது நடவடிக்கை!

*பொலிஸ் தலைமையகத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் மனு*

தொல்பொருள் சட்டங்களை மீறிச் செயற்பட்ட ரஷ்யாவுக்கான முன் னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பின ரான மயந்த திஸாநாயக்க பொலிஸ் தலைமையகத்தில் நேற்று வெள் ளிக்கிழமை முறையிட்டுள்ளார்.
அண்மையில் இலங்கை வந்த உக் ரைன் நாட்டு சுற்றுலாப் பயணிகளு டன் சிகிரியா சென்ற உதயங்க வீர துங்க, அங்கு பெரிதும் மதிக்கப்படு கின்ற மற்றும் தொல்பொருள் திணைக்களத்தால் ஒளிப்படம் எடுக்க வேண்டாம், அதன் மீது நிற்க வேண் டாம் என அறிவுறுத்தப்பட்ட இடங்க ளில் சட்டங்களை மீறி குறித்த குழு வினர் ஈடுபட அனுச ரணை வழங்கி யிருந்தார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தொல்பொருள் திணைக்களத்தின் சட்டங்களை மீறுகின்றவர்களுக்கு குறைந்த பட்சம் 2 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்ற சட்ட ஏற்பாட்டையும் தனது கடிதத்தில் மயந்த சுட்டிக்காட்டியு ள்ளார். (ஒ-இ)

## சந்தேகநபர்கள் இருவருக்கு பிணை

சாவகச்சேரி,ஜன.23
அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந் திரத்தில் 35 கிலோ பன்றி இறைச்சி யைஏற்றி வந்த குற்றச்சாட்டில் கைதான இருவரை பிணையில் செல்ல சாவகச்சேரி நீதிமன்றில் உத் தரவிடப்பட்டது.
கொடிகாமம் பாலாவி, பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்றுமுன்தினம் மிருசுவில் வடக்கு பகுதியில் வைத்து பன்றி இறைச்சியுடன் கைது செய்யப் பட்டனர். சந்தேகநபர்கள் இருவரை யும் நீதிமன்ற நீதிவான் முன்னிலை யில் முற்படுத்திய போது அவர்கள் பிணையில் செல்ல அனுமதி வழங்கப் பட்டது. (ஜ-9)

# மேற்கிந்தியத் தீவுகளை மீண்டும் புரட்டியது வங்கம்







டாக்கா, ஜன. 23

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றிபெற்றது பங்களாதேஷ். தொடரின் முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றி பெற்றிருந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பவல் 48 ஓட்டங்களையும், ஒட்லி 24 ஓட்டங்களையும், பொனர் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மிராஸ் 4 இலக்குகளையும், ரகுமான், சகிப் அல் ஹசன் இருவரும் தலா 2 இலக்குகளையும், மக்முட் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 33.2 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அணித்தலைவர் இக்பால் 50 ஓட்டங்களையும், சகில் அல் ஹசன் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)

# மத்தியூஸ் சதம் இலங்கை பலம்!







காலி, ஜன. 23

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று மத்தியூஸின் சதத்தின் உதவியுடன் இலங்கை அணி வலுவான நிலையில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களான திரிமன்னே மற்றும் குசல் பெரேரா. வெறும் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் குசல் பெரேரா. குசல் மெண்டிஸின் இடத்தில் களமிறக்கப்பட்ட ஒசாடா பெர்னாண்டோ ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். 7 ஓட்டங்களில் 2 இலக்குகளை இழந்தது இலங்கை அணி. திரிமன்னே, மத்தியூஸ் இணை ஓரளவு தாக்குப்பிடித்து விளையாடியது. பிறிதொரு இலக்கை இழக்காமல் 50 ஓட்டங்களைக் கடந்தது இலங்கை. அணி 76 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 43 ஓட்டங்களுடன் திரிமன்னே ஆட்டமிழந்தார்.

மத்தியூஸ், சந்திமல் இணைந்து அணியைச் சரிவில் இருந்து மீட்டனர். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க இணைப்பாட்டம் 100 ஓட்டங்களைக் கடந்தது. சந்திமல் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சதம் கடந்தார் மத்தியூஸ். நாள் முடிவில் இலங்கை அணி 4 இலக்குகளை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. (ம)

# பெப்ரவரி 18இல் ஐ.பி.எல் ஏலம்!!

புதுடெல்லி, ஜன. 23

இந்த வருட ஐ.பி.எல் தொடருக்கான ஏலம் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட ஐ.பி.எல் தொடருக்கான ஏற்பாடுகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு அணிகளும் இந்தத் தொடருக்காக தக்கவைத்த மற்றும் விடுவித்த வீரர்களின் விவரங்களை கடந்த 20ஆம் திகதி அறிவித்தன. இந்த நிலையில் விடுவித்த வீரர்கள் மற்றும் புதிதாக இணையும் வீரர்களை வைத்து ஏலம் பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏலம் எங்கு இடம்பெறும் என்பது தொடர்பில் தகவல்கள் வெளியாகவில்லை.


சிமித் உள்ளிட்ட வீரர்கள் இந்த ஏலத்தில் இடம்பெற்றுள்ளனர். சென்னை சுப்பர் கிங்ஸ் சிமித்தை ஏலத்தில் எடுக்கும் என்பது ரசிகர்கள் பலரின் பொதுவான கருத்தாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு அணிகளும் சராசரியாக 25 முதல் 30 கோடி வரையிலான தொகைகளை ஏலத்துக்காகத் தக்கவைத்துள்ளன. (ம)



# டஸ்ரின் - மக்ரேகர் நாளை பலப்பரீட்சை

**லண்டன், ஜன. 23**

**உலக குத்துச்சண்டையின் முடிசூடா மன்னனாக விளங்கும் அயர்லாந்தின் மக்ரேகர் மற்றும் அமெரிக்க வீரரான டஸ்ரின் இருவரும் நாளை 'லைட் வெய்ட்' பிரிவில் பலப்பரீட்சை நடத்தவுள்ளனர்.**






பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இந்த மோதல் இடம்பெறுகின்றது.

கடந்த 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இவர்கள் இருவரும் இறுதியாக மோதியிருந்தனர். ஒரு நிமிடங்களும் 46 செக்கன்களும்தான் இந்த மோதல் நீடித்தது. முதல் சுற்றிலேயே மக்ரேகர் வெற்றிபெற்றார். இதையடுத்து சுமார் 6 வருடங்களின் பின்னர் இவர்கள் இருவரும் மீண்டும் ஒருவரை ஒருவர் எதிர்க்கின்றனர்.

மக்ரேகர் இறுதியாக கடந்த வருடம் ஜனவரி மாதம் டொனால்ட் கரோனை (கௌ போய்) எதிர்கொண்டார். வெறும் 40 செக்கன்களில் மக்ரேகர் வெற்றிபெற்றார். இதனால் மக்ரேகர்மீது நாளை கடும் எதிர்பார்ப்பு உள்ளது. இந்த மோதலிலும் 'நொக் அவுட்' செய்யும் நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். (ம)

# ஆச்சர், ஸ்ரோக்ஸ் மீண்டும் அணியில்

லண்டன், ஜன. 23


இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முதல் இரு ஆட்டங்களுக்கான இங்கிலாந்து அணி அணிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான தொடரில் இடம்பெறாத ஆச்சர், ஸ்ரோக்ஸ் இருவரும் அணிக்கு மீண்டும் திரும்பியுள்ளனர்.

இங்கிலாந்து அணி ஜோ ரூட் (தலைவர்), ஆச்சர், மொயின் அலி, அண்டர்சன், புரோட், பெஸ், பேர்ண்ஸ், பட்லர், கிராவ்லி, போக்ஸ், லாறன்ஸ், லீச், சிப்லி, ஸ்ரோக்ஸ், ஸ்டோன், வோக்ஸ். (ம)



விஜயரத்தினம் சரவணன்



# பறிபோகும் குருந்தூர்!

குருந்தூர் மலைப் பகுதியை 'தொல்லியல்' என்ற போர்வை போர்த்தி தமிழர்களிடம் இருந்து வலிந்து பறித்தெடுக்கும் முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இடப்பெயர்வின்போதும், போரின் பின்னரான காலகட்டத்திலும் வடக்கு மற்றும் கிழக்கில் நில அபகரிப்பு மற்றும் சிங்கள மயமாக்கல் என்பவை துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இந்தப் பேராபத்தின் பெரும் பாய்ச்சலாகத்தான் குருந்தூர் மலையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நோக்க முடியும்.

குருந்தூர் மலையானது வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்தில், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் தண்ணிமுறிப்புப் பகுதியில் அமைந்துள்ளது. இது தமிழர்களின் பூர்வீக நிலமாகும். தமிழ் மன்னர்கள் ஆட்சியமைந்த கட்டடச் சிதைவுகள் அங்குள்ளன என்றும் நம்பப்படுகின்றது. ஆனால் 2018ஆம் ஆண்டிலிருந்து குருந்தூர் மலைப்பகுதியின் வரலாற்றை மாற்றி பேரினவாதத்துடன் கலந்து எழுதும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் குறித்த பகுதியில் பௌத்த கட்டுமானங்கள் மற்றும் விகாரைகள் அமைப்பதற்காக தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு மக்களின் எதிர்ப்பால் அவை கைவிடப்பட்ட நிலையில் கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு இத்தகைய அபகரிப்புக்களுக்குக் கிடைத்த பெரும் வரம் என்பதுதான் வெள்ளிடைமலை.

### நீதிமன்றின் கட்டளைகள்

கடந்த செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் குருந்தூர் மலைப்பகுதியில் அத்துமீறி விகாரை அமைக்க முற்பட்ட பௌத்த குழுவினருக்கு எதிரான வழக்கில் சில உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தது. அவற்றில் முக்கியமானது, குறித்த பகுதியில் எந்தப் புதிய கட்டுமானங்களும் அமைக்க முடியாது என்பதே. அத்துடன், கிராம மக்கள் இயற்கை முறையிலான தமது வழிபாடுகளை மேற்கொள்ள எந்தத் தடையுமில்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது.

இதையடுத்து நகர்த்தல் பத்திரம் தாக்கல்செய்து வழக்கு விசாரணைகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டன. பௌத்த குருமார்களின் சார்பாக முன்னிலையான தொல்பொருள் திணைக்கள சட்டத்தரணிகள், குருந்தூர் மலைப்பகுதியில் 'குருந்த அசோகாராம' பௌத்த வழிபாட்டுத் தலம் இருந்துள்ளது என்று மன்றில் தெரிவித்தனர். ஆனால், இந்தக் கருத்துக்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்ட மறுதரப்புச் சட்டத்தரணிகள், குறித்த பகுதி காலாதி காலமாக மக்களுக்குச் சொந்தமான பகுதி என்றும் பிரிட்டிஷாரிடம் இருந்து அவை வாங்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் உள்ளன என்றும், இடித்துரைத்தனர். அத்துடன் தொல்பொருள் திணைக்களத்தின் பகுதியென்றால் எதற்காக பௌத்த பிக்குகள் அங்கு வந்தனர் என்றும், பிக்குகளுக்கு இந்த அதிகாரத்தை எந்த அடிப்படையில் தொல்பொருள் திணைக்களம் வழங்கியது என்றும் மன்றில் கேள்வி எழுப்பினர். இதையடுத்து தொல்பொருள் திணைக்களத்தை எச்சரித்த நீதிமன்றம் குறித்த பகுதியில் ஒரு காவலரண் அமைக்க அனுமதி உண்டென்றும், மதரீதியான கட்டுமானங்களை மேற்கொள்ள முடியாது என்றும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தது. ஆனால் அவ்வப்போது தொல்பொருள் திணைக்களத்தின் அத்துமீறல்கள் தொடர்ந்து வந்தன.

அண்மைய நாள்களாக குருந்தூர் மலைக்கு தமிழ் மக்கள் சென்று வழிபடுவதற்கு தொல்லியல் திணைக்களத்தினர் தடைவிதிப்பதுடன், அங்கு இரகசியமான முறையில் சில பணிகள் இடம்பெறுகின்றனர் என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அந்தப் பகுதிமக்கள் தெரியப்படுத்தியிருந்தனர். அதற்கமைய கடந்த 17ஆம் திகதியன்று வன்னிமாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராத லிங்கம மற்றும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் நிலமைகளை நேரில்சென்று ஆராய்ந்ததுடன், அங்கு இரகசியமான முறையில் இடம்பெறும் பணிகள் குறித்தும், தமிழ் மக்கள் வழிபடுவதற்கு தடுக்கப்படுகின்றமை குறித்தும் அங்கிருந்த தொல்பொருள் திணைக்களத்தினரி டமும் பொலிஸாரி டமும் கேள்வி எழுப்பினர். அப்போது அங்கிருந்த தொல்பொருள் திணைக்களத்தினர், மறுநாளில் இருந்து குருந்தூர் மலைப் பகுதியில் தொல்பொருள் ஆராய்ச்சிகள் இடம்பெறவுள்ளன என்றும் அந்தத் தொடக்க நிகழ்வுக்கு தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க வருகை தந்து தொல்லியல் ஆராய்ச்சியை ஆரம்பித்து வைப்பார் என்றும் அதற்குரிய பணிகளே இடம்பெறுகின்றன என்றும் குறிப்பிட்ட னர்.

> குருந்தூர் மலையானது வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்தில், கரைதுறைப் பற்று பிரதேசசெயலர் பிரிவில் தண்ணிமுறிப்புப் பகுதியில் அமைந்துள்ளது. இது தமிழர்களின் பூர்வீக நிலமாகும். தமிழ் மன்னர்கள் ஆட்சியமைந்த கட்டடச் சிதைவுகள் அங்குள்ளன என்றும் நம்பப்படுகின்றது.




### தொல்லியல் ஆய்வு

தமிழ் மக்களுக்கு சொந்தமான புராதன ஆதிசிவன் ஐயனார் ஆலயம் அமைந்துள்ள வயல் நிலங்கள், காணிகள் உள்ளடங்கிய குமுழமுனை, தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை மற்றும் மணலாறு, படலைக்கல்லு பகுதி ஆகிய இடங்களில் இரண்டு புராதன பௌத்த விகாரைகள் இருந்தமைக்கான தொல்லியல் சிதைவுகள் காணப்படுகின்றன என்று தெரிவித்து இராணுவத்தின் அனுசரணையுடன் தொல்லியல் திணைக்களத்தால் அகழ்வுப் பணிகள் கடந்த 18ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டன.


இந்தப் பணிகளை இராணுவத்தினர் புடைசூழ தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க மற்றும், தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மானதுங்க, தொல்லியல் அமைச்சின் செயலாளர், முல்லைத்தீவு பாதுகாப்பு படைகளின் தளபதி ஜெகத் ரத்நாயக்க ஆகியோர் பௌத்த ஆகம முறைப்படி பிரித் ஓதி ஆரம்பித்து வைத்தனர். இதன்போது புத்தர் சிலை யொன்றும் அங்கு நிறுவப்பட்டது.

### ஏன் இந்த அத்துமீறல்?

முல்லைத்தீவு நீதிமன்றம் கடந்த செப்ரெம்பர் 13ஆம் திகதி பிறப்பித்த கட்டளையில், குறித்த பகுதியில் உள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான ஆலயத்தில் மக்கள் வழிபடலாம் என்றும், எந்தவிதமான கட்டுமானங்களையும் இரு சாராரும் செய்ய முடியாது என்றும், தொல்லியல் திணைக்களம் மாத்திரம் ஆய்வுகளை செய்யலாம் என்றும், தொல்லியல் ஆய்வுகளை செய்வதாக இருந்தால் யாழ் பல்கலைக்கழக தொல்லியல் துறையின் பங்களிப்போடு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்த நிலையில் இராணுவத்தினர் நூற்றுக்கணக்காக குவிக்கப்பட்டு, இராணுவமே தொல்லியல் ஆய்வுகளை செய்வது போல தமது கொடிகளை நட்டு தொல்லியல் ஆய்வு என்ற பெயரால் பௌத்த விகாரையை நிர்மாணித்து குறித்த தமிழ் மக்களுக்கு சொந்தமான பிரதேசத்தை சிங்கள மயபடுத்த தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற அச்சம் தற்போது வலுவாகவே தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அந்த அச்சம் தவிர்க்க முடியாததும் நியாயமானதும்கூட.




## மரண அறிவித்தல்



### கனகரத்தினம் செல்வராசா (பூபாலு ஐயா)

யாழ். கருகம்பனை - கவுணாவத்தையை பிறப்பிடமாகவும், கீரிமலையை வசிப்பிட மாகவும், நோர்வேயில் வாழ்ந்து வந்தவருமான அமரர் கனகரத்தினம் செல்வராசா (பூபாலு ஐயா) அவர்கள் 21.01.2021 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம்–கைராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மக னும், தந்தசாமி வாத்தியார்(தாய்மாமன்) - திலகவதி தம்பதியினர் (ஏழாலை) மற்றும் காலஞ்சென்ற முருகையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், இரா ஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற உதயகுமார், சந்திரகுமார் (மனோகர்); காலஞ்சென்ற சிறீகுமார் (சிறீ), ராஜகுமார் (ஜெய்), ஜலஜாகுமாரி (பிள்ளை), சோதிகுமார் (அப்பன்), ராஜகுமாரி (நடுவில்), ஜெயகுமாரி (பாமினி), சந்திரகுமாரி (ரேணு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதிவதனி, சிவநேஸ்வரி, செல்வராசா- (வலிகாமம் வடக்கு, பிரதேசசபை, சுகாதார மேற்பார்வை உத்தியோகத்தர்), அருட் செல்வி, கணேசமூர்த்தி, சுந்தர், திலீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மாணிக்க வாசகர் (குணம்), நகுலேஸ்வரி (கிளி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற விசாகப்பெருமாள், காலஞ்சென்ற அகிலாம்பிகை ரேவண ராத்திரியர், தம்பித்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிறீ விதுரன், ரெஜினா, ருவானி, சாள்ஸ் பெனா, நிதர்சன், ஜனகா, துசியந்தன், கௌசிகா, சரணிகா, தனஞ்சினி, மதுசானி, மயூரன், மயூரி, திவியா, சாருஜா, அபிநயா, யாழினி, கயலினி ஆகியோரின் அன்புப் பேரனும், சண்முகப்பிரியன்,ரிசவப்பிரியன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 24.01.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று அள வெட்டியில் அமைந்துள்ள அவரது மகள் வீட்டில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கீரிமலை "செம்பொன் வாய்க்கால்" இடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:** மனோகர் (London) - 00447855132997
அப்பன் (Swiss) - 0041763041609
பாமினி (Norway) - 004741593229
ரேணு (Norway) - 004795962658
கிளி (சகோதரி - Canada) - 014164564259
ராசுகுட்டி (அளவெட்டி) 077 8863 630

# இலங்கையை வந்தடைந்தனர் 15 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஜன.23

வணிக விமானங்களுக்காக விமான நிலையங்கள் இலங்கையில் மீண்டும் திறக்கப்பட்ட பின்னர், டச்சு நாட்டு சுற்றுலாப் பயணிகள் 10 பேர் மற்றும் ஜேர்மன் நாட்டு சுற்றுலாப் பயணிகள் 5 பேர் நேற்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர் என்று இலங்கை சுற்றுலாச் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, வேலைவாய்ப்புக்காக பஹ்ரைன் சென்றிருந்த 186 இலங்கையர்கள் நேற்றுமுன்தினம் மாலை நாடு திரும்பியுள்ளனர். (ற-இ)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தங்கராசா ஜெயராகவன்

மலர்வு 29.05.1980 — உதிர்வு 16.01.2019

திதி: தைமாத வளர்பிறை தசமி

அன்பு மகனே ராகவா நீ இப் பூவுலகை விட்டு வானுலகம் சென்று ஆண்டு இரண்டு சென்றதைய்யா எத்தனை ஆண்டுதான் வந்து போனாலும் நீ அம்மா என்று அன்போடு அழைக்கும் வார்த்தையும் உன் அழகான தோற்றத்தையும் என்னால் மறக்கமுடிய வில்லை நித்தம் நித்தம் உன் பிரிவுத்துயரால் கலங்கித் தவிக்கின்றேன். உன் ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரர்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அம்மா தங்கராசா நாகேஸ்வரி (தவம்),
அக்கா - ஜெயலட்சுமி, அத்தான் தங்கவேல் மருமக்கள் ஷயந்தத், அதிஷயா, நிமிஷா (சுவிஸ்)

பெரியமணல்
வலந்தலை,
காரைநகர்.

## மரண அறிவித்தல்

மலர்வு 08 ✸ 08 ✸ 1929 — உதிர்வு 21 ✸ 01 ✸ 2021



### திருமதி.வள்ளியம்மை (தங்கம்மா)

சுதுமலை தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் - கட்டுடை, வெள்ளவத்தையினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.வள்ளியம்மை (தங்கம்மா) 21.1.2021 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னையா நாகமுத்து தம்பதிகளின் அன்பு கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், மனோகரி, தனலட்சுமி (சுந்தரி), புஸ்பாதேவி (சூட்டி) ஆகியோரின் அன்பு தாயாரும், ரங்கநாதன், தங்கராஜ், ஆகியோரின் அன்பு மாமியாரும், மீனுஜன்,டீக்ஷனா, சரன், ஆகியோரின் அன்பு பேத்தியும் காலஞ்சென்ற காராளபிள்ளை, நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் ஆவார். அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா, முருகேசு, தெய்வானைப்பிள்ளை, சரஸ்வதி, சபாரத்தினம், அழகரத்தினம், ஆகியோரின் அன்பு சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 24.01.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 11.00 மணி முதல் கிரியைகள் நடைபெற்று நண்பகல் 1.00 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர் **No.26, 5/2 Moor Road, Wellawatte**

# 24 மணி நேரத்தில் 30 பேர் கைது!

கொழும்பு, ஜன.23

முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் கடந்த ஒக்ரோபர் 30ஆம் திகதியிலிருந்து இதுவரை 2 ஆயிரத்து 710 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இரண்டாயிரத்து 600 நபர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது எனவும் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ற -இ)

## வேலையாள்கள் தேவை

யாழ்நகரில் உள்ள பிரபல்யமான
**புடைவை விற்பனை**
**நிலையத்துக்கு** அனுபவமுள்ள
ஆண், பெண் விற்பனையாளர்
உடன்தேவை. மேலும் கணினி
அனுபவம் உள்ள ஆண், பெண்
**சிட்டை எழுதுனர்**
**(பில் கிளாக்)** உடன் தேவை.

**074 142 4358**

## பிரத்தியேக வகுப்பு

தரம்: 6 முதல் O/L வரையான **வரலாறு** பாடம்
திருமதி **பி.டிலக்ஷனா** (B.A.Hons)

**074 179 3394**

## விற்பனைக்கு

**Pasty Sheeter Machine**
**(பேஸ்டி சீற்றாமெசின்)**
உடன் விற்பனைக்குண்டு. ஞாயிற்றுக்கிழமை
(உசனில்) ஓடிப்பார்த்து வாங்கமுடியும்.

**077 271 8292, 077 0401 055**

## இப்போது விற்பனையில் !

- ✓ ஆனந்த விகடன் குழுமம்
- ✓ குமுதம் குழுமம்
- ✓ ராணி குழுமம்
- ✓ கல்கி குழுமம்
- ✓ ஹிந்து குழுமம்
- ✓ இந்தியா டுடே குழுமம்
- ✓ குங்குமம் குழுமம்
- ✓ மற்றும் ஆங்கில சஞ்சிகைகள்







max adz

ஏஜெண்டுகள் வரவேற்கப்படுகின்றனர் !
சந்தாக்கள் (subscription) ஏற்கப்படும்

**இலங்கைக்கான இறக்குமதியாளர்கள்**
**Suri Agency (Pvt)Ltd,Dehiwala.Tel : 0774710776**
Email : suriagency@gmail.com

## பணிப்பெண் தேவை

**சமையல் வேலையுடன்**
**வீட்டுப்பணி செய்பவர்**
**25 - 50 வயதுக்குட்பட்டோர்**
**விரும்பத்தக்கது**
ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும்
புதன்கிழமை (27.01.2021) அல்லது
அதற்கு முன்னர் பின்வரும் தொலைபேசி
இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**070 728 3616**

**NOTICE**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELERATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

**POST OF PROJECT ASSISTANT cum RESEARCH ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – \01**

**DEVELOPMENT ORIENTED RESEARCH (DOR) PROJECT – FACULTY OF ENGINEERING**

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned post under OTS – AHEAD Operation from suitably qualified persons up to 05.02.2021

The Post carries all inclusive monthly salary of Rs.70,000/= in addition applicable EPF & ETF will be paid.

Applicants are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for further details.

Registrar


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
30 . 10 . 1969


இறப்பு
04 . 02 . 2020

அமரர்
**வனிதா அருணாசலம்**

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்தது அக்கா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அக்காவே....
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்...........

**"வசந்தம்"**
**இணுவில் தெற்கு, இணுவில்.**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



மண்ணில்
20 . 01 . 1929

விண்ணில்
14 . 01 . 2021

### திருமதி அன்னம்மா வைத்தியலிங்கம்

யாழ். காரைநகர் களபூமி பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட அன்னம்மா வைத்தியலிங்கம் 14-01-2021 வியாழக்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முகாந்திரம் ஆ.ச.சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணபிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்தியகலாநிதி வைத்தியலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சுபத்திராதேவி (லண்டன்), காலஞ்சென்ற பாலசுந்தரம், சூரியகுமார் (அவுஸ்திரேலியா), ஸ்கந்தராஜா (லண்டன்), இன்பராணி(சுவிஸ்), ரேவதி(நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செந்தில்நாதன், வரலஷ்மி (லண்டன்), செல்வராணி (அவுஸ்திரேலியா), மஞ்சுளாவதி (லண்டன்), சற்குணராஜா (சுவிஸ்), கண்ணபிரான் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இராசரத்தினம், ஞானப்பிரகாசம், காலஞ்சென்ற செல்வராஜா, பத்மாவதி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனோன்மணி, வசந்தாதேவி, புஸ்பலோஜினி, பாலசண்முகம், தனபாலசிங்கம், காலஞ்சென்ற சுகந்தமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவசரண், விதுரன், கலிங்கன், சாய்கரன், தரண்யா, அஜந்தினி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், அபிராமி- ஒளி, நந்தகோபன்- விதுஷியா, குமரன், வித்யா , அபிமன்யு, மதுரா, மித்ரா, மாதுரன் ஆகியோ ரின் பாசமிகு அம்மம்மாவும், தாரகை அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு

| | | |
|---|---|---|
| ஸ்கந்தராஜா | - மகன் | • Phone : +442 0890 73712 |
| சூரியகுமார் | - மகன் | • Mobile : +614 1922 2153 |
| சுபத்திராதேவி | - மகள் | • Mobile : +447 8529 47799 |
| இன்பராணி | - மகள் | • Mobile : +417 8622 6298 |
| ரேவதி | - மகள் | • Mobile : +479 1785 443 |

**தகவல்:**
**பிள்ளைகள்**

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
04 . 05 . 1953

உதிர்வு
26 . 01 . 2018

## அமரர் கணபதிப்பிள்ளை புலேந்திரன்


(உரிமையாளர் - நியூ V.M.K. ஜுவல்லர்ஸ்,
ஸ்தாபகர் - V.M.K. மில் - சாவகச்சேரி)

அன்பு எனும் மூன்று எழுத்துக்கு
ஆயிரம் அர்த்தம் சொல்லி
இன்பத்தையும் துன்பத்தையும் புரிய வைத்து
ஈன்றோர் சான்றோர் போற்ற
உழைப்பே ஊதியம் என கருதி
ஊக்கத்தோடு செயல்பட்டு
எட்டுப்படி நாங்கள் ஏற
ஏணியாக நீங்கள் இருந்தீர்கள் - இன்று
ஐயம் கொண்டோம் இவ்வுலகில்
ஒளி இன்று இருளாகிவிட்டது
மூன்றாண்டு ஆகியும் ஆறவில்லை - நம் துயரம்
ஔடதமாக தேற்றிட வருவீர்களா?

கண்டிறோட், சாவகச்சேரி.

V.M.K. குடும்பத்தினர்.

# தொலைதூர ஏவுகணையை பாக். வெற்றிகரச் சோதனை



இஸ்லாமபாத், ஜன. 23

தொலைதூரம் பயணிக்கவல்ல ஏவுகணைச் சோதனையை வெற்றிகரமாகச் சோதித்துள்ளது பாகிஸ்தான். எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் இந்தச் சோதனை பாகிஸ்தானால் நிகழ்த்தப்பட்டுள்ளது. சுமார் 2 ஆயிரத்து 750 கிலோமீற்றர் தூரம் வரையில் சென்று இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் வினைத் திறன் இந்த ஏவுகணைக்கு உண்டு. குறிப்பாக இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் இந்த ஏவுகணையால் இலக்கு வைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. 'ஷாகின் 3' என்று குறித்த ஏவுகணைக்குப் பெயரிடப்பட்டுள்ளது. (ம)


## பணியாளர் தேவை
## Vacancy

Kabris Kingdom Fast Food Restaurants க்கு restaurants IT, முகாமைத்துவம், Accounts போன்ற மேற்குறித்த அனுபவமுள்ள முகாமையாளர் தேவை.

இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். **077 343 8373**

## கடை வாடகைக்கு உண்டு

கஸ்தூரியார் வீதியில் உள்ள மாநகரசபை கட்டடத்தில் கடை வாடகைக்கு உண்டு.

• சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளது

**074 142 4358**


## மரண அறிவித்தல்



### கிருஸ்ணபிள்ளை ஜெய்ரதன்

அ.மி.த.க. பாடசாலை வீதி, அளவெட்டி தெற்கு, அளவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை ஜெய்ரதன் அவர்கள் நேற்று (22.01.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கிருஸ்ணபிள்ளை மனோன்மணி அவர்களின் கனிஸ்ர புதல்வனும், சர்மிலா அவர்களின் கணவரும், தர்சினி, ராஜினி (அருணோதயா கல்லூரி ஆசிரியர்), ஜெய்கீசன், ராகினி (உடுவில் பிரதேச செயலகம்) ஆகியோரின் சகோதரரும், அக்சரன், அக்சயனி ஆகியோரின் தந்தையும், வைத்திலிங்கம் விமலானந்த ரதி ஆகியோரின் மருமகனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.01.2021 ஞாயிறு முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைநகர், அளவெட்டி தெற்கு.

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 833 3918**

## மரண அறிவித்தல்

பிறப்பு
30.06.1926



இறப்பு
22.01.2021

### நாதஸ்வர வித்துவான்
### கலாபூஷணம் வல்லிபுரம் குமாரசாமி (ராசு)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை புலோலியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் சங்கிலியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் வல்லிபுரம் குமாரசாமி (ராசு) அவர்கள் 22.01.2021 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - கமலம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலாயுதம் - ராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலாவதியின் அன்புக் கணவரும் விஜயவனிதா, உதயணன் (லண்டன்), மதுரகுமார் (வெள்ளை), சிவனேஸ்வரி, சிவனேஸ்வரநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர் ராஜகோபால் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் பாலாம்பிகை, கனகாம்பரி (ஆசிரியை) ஆகியோரின் மாமனாரும், சிறீலதன் (லண்டன்), தமயந்தி (லண்டன்), வினோஜா, சிவசங்கரி (லண்டன்), விபூசனன், சிந்துமாலா, காலஞ்சென்ற கஸ்தூரி மற்றும் ராகப்பிரியா, கானவர்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனும், ரிஷிகேஷவனின் (லண்டன்) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (24.01.2021) ஆம் திகதி இல.03, சங்கிலியன் வீதி, நல்லூரிலுள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு இடம்பெற்று, செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:** **மகன் (சிவனேஸ்வரநாதன்)** - 077 480 9993
**மகன் (மதுரகுமார்)** - 0777065284
**மகள் (சிவனேஸ்வரி)** - 076 8932764
**மகன் (உதயணன்-லண்டன்)** - +44 7414090612

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்....

### குடும்ப...

வர்கள் அவரை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோதும் அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவரின் சடலம், சாவகச்சேரி மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ப-9)

### உயர்தர....

யில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

உயர்தர வகுப்பு மாணவியான சந்திரமௌலீஸ்வரன் கிரிஜா (வயது 18) என்ற மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக அக்கராயன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ப-ரி2)

### சுகாதார...

அவருக்கு மேற்படி தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அன்டிஜன் சோதனைக்கு மேலதிகமாக பி.சி.ஆர் சோதனைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் பணியாற்றும் ஊழியர்களுக்குத் தொற்றுள்ளமை கடந்த சில நாள்களாகக் கண்டறியப்படும் நிலையில் சுகாதார அமைச்சருக்கும் தொற்றுள்ளமை தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்த க்கது. (ம)

### வடக்கில்...

தொற்றியுள்ளது என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் 10 தொற்றாளர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 9 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வடக்கு மாகாணத்தில் கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் ஜனவரி 22 ஆம் திகதி வரை 752 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளது. (ஓ-44)

### வவுனியா...

மனைப் பணியாளர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

வவுனியா, பட்டாணிச்சூரில் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்ட பின்னர், வவுனியா நகரப் பகுதியில் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றின் ஒரு தொகுதி முடிவுகள் நேற்று வெளியான நிலையில், 26 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. அவர்களில் மூவர் மருத்துவமனைப் பணியாளர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

### கணவன்...

காரணமாக காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். மட்டக்களப்பு அரசடி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கோட்டமுனையில் கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த 16ஆம் உயிரிழந்தவரின் மனைவியே உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, அரசடி கிராம அலுவலர் பிரிவில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன், பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் 22 பேர் கொரோனாத் தொற்றுடன் இனங் காணப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ப-150)


## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1987 மகம், சிம்மராசியில் பிறந்த சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 336 1750**



காரைநகர்
## கிழவன்காடு கலாமன்றம்
நடத்தும்

## சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்
## ஆராதனை அர்ப்பண நிகழ்வு

எமது கலாமன்றத்தில் எதிர்வரும் 02.02.2021ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் ஆராதனை அர்ப்பண நிகழ்வு நடைபெறவுள்ளது என்பதை கலைஞர்கள், கலா ரசிகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

**கிழவன்காடு கலா மன்றத்தினர்**
**காரைநகர்.**

## போர்க் குற்றங்களை...

அதன் ஒரு கட்டமாக இலங்கையில் நடைபெற்றது என்று கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், பொறுப்புக்கூறல் விடயங்கள் தொடர்பாக ஆராயவும் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை மீண்டும் பரிசீலிப்பதற்கு 3 பேர் கொண்ட ஆணைக்குழு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் அமைக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர் எச்.எம்.எம் நவாஸ் தலைமையில், ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் நிமல் அபேசிறி ஆகியோர் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக விசேட வர்த்தமானி மூலம் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 20ஆம் திகதி முதல் இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை மாற்று நடவடிக்கைகளைக் கையாள்வதற்குத் தீர்மானித்துள்ள நிலையிலேயே இந்த ஆணைக்குழுவும்நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரத்தில் இந்த ஆணைக்குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்தார். அதன்பின்னர் வேகமாக அது தொடர்பாக அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டு அதற்கான உறுப்பினர்கள் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஆணைக்குழுவினர் கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் அறிக்கை, காணாமல்போனோர் தொடர்பாக ஆராயவென அமைக்கப்பட்ட பரணகம ஆணைக்குழு அறிக்கை உள்ளிட்ட கடந்த காலங்களில் அமைக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஆராயவுள்ளனர். ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னர் இவர்கள் தமது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளனர்.

அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஜெனிவாவில் இலங்கை சார்பில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. (எ-22)

## இலங்கைக்கு...

சர்வதேச மன்னிப்புச் சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகி, மார்ச் மாதம் 19 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. அதில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கண்காணிப்பதற்கும் அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் கடந்த காலங்களில் இடம்பெற்ற மாபெரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைச் சேகரிப்பதற்கும் சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும்.

இலங்கையில் மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஊடகங்கள் மீதான அடக்குமுறையில் ஏற்பட்டிருக்கும் அதிகரிப்பு, முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மீதான தாக்குதல்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 30/1 தீர்மானத்தில் உள்ளவற்றில் மிகவும் வரையறுக்கப்பட்ட தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டுள்ளமை மற்றும் பொறுப்புக்கூறல் உள்ளடங்கலாக 30/1 தீர்மானத்திலிருந்து விலகுவதாக இலங்கை அறிவித்தமை ஆகியவற்றின் பின்னணியில் இத்தகையதொரு சர்வதேச நீதிப்பொறிமுறை அவசியமாகும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரில் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தால் முன்வைக்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில், ஒரு முறையான பொறிமுறையின் கீழ் இலங்கை அரசு செயற்படும் என்று எதிர்பார்க்கின்றோம். கடந்த சில வருடங்களில், முக்கியமாக கடந்த வருடம் இலங்கையின் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் உள்ளடங்கலாக சிவில் சமூகக்குழுக்களுக்கான இடைவெளி பாதகமான முறையில் மட்டுப்படுத்தப்பட்டமையை எம்மால் அவதானிக்க முடிந்தது.

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையின் ஊடகவியலாளர் தரிஷா பாஸ்டியன்ஸ் மீதான அடக்குமுறை, சமூகவலைத்தள செயற்பாட்டாளர் ரம்ஸி ரஸீக் மற்றும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா ஆகியோரின் கட்டாய தடுத்துவைப்பு, எழுத்தாளர் ஷக்திக சத்குமாரவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை ஆகியவை தொடர்பில் நாம் ஏற்கனவே விசேடமாக சுட்டிக்காட்டியிருந்தோம்.

இத்தகைய அடக்குமுறைகளின் விளைவாக பல செயற்பாட்டாளர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருக்கின்றார்கள். அதுமாத்திரமன்றி இலங்கையில் தொடர்ந்தும் சிறுபான்மை இனத்தவர்களை இலக்குவைத்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பெரிதும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளன-என்றுள்ளது. (எ-22)

## வெடுக்குநாறி....

நீண்ட காலமாக தமிழ் மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருள் திணைக்களமும் தடைகளை ஏற்படுத்தியிருந்தது. தொல்பொருள் சார்ந்த ஏற்பாடுகளின்படி வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கலும் செய்திருந்தனர்.

இந்த வழக்கு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஆலய நிர்வாகத்தின் தலைவர் சசிக்குமார், செயலாளர் தமிழ்ச்செல்வன், பூசகர் மதிமுகராஜா ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகியிரு ந்தனர். தொல்பொருள் சார்ந்த விடயம் என்பதால் வழக்கு முடியும்வரை ஆலய நிர்வாகத்தினரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று தொல்பொருள் திணைக்களம் சார்பில் கோரப்பட்டது.

அவர்களின் கோரிக்கையை நிராகரித்த மன்று, 50 ஆயிரம் ரூபா சரீர பிணையில் செல்ல ஆலய நிர்வாகத்தினருக்கு அனுமதி அளித்தது. அதன்பின்னர் கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றில் வழக்குக்காக முன்னிலையாகினர். கொரோனாத் தொற்றுக் காரணமாக வழக்குகள் அழைக்கப்படாது இந்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்தநிலையில் தொல்பொருள் திணைக்களம் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்ததை அடுத்து, கடந்த டிசெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டுள்ளது. அந்தத் தினத்தில் ஆலய நிர்வாகத்தினர் நீதிமன்றுக்கு சமூகமளிக்கவில்லை.

வழக்குத் திகதி மாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாக நெடுங்கேணிப் பொலிஸார் தங்களுக்குத் தெரியப்படுத்தவிலை என்று ஆலய நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் வழக்குத் தவணைக்கு சமூகமளிக்காமையால் அவர்களின் பிணை அனுமதியும் இரத்தாகியது. அதையடுத்து நீதிமன்று ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்தது.

நேற்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஆலய நிர்வாகத்தினரும், பூசகரும் நீதிமன்றில் முன்னிலையாகினர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (எ-110)

## முறையற்ற....

வைக்காதீர்கள் என்று தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா.

இராஜாங்க அமைச்சருக்கும் மாவை சோ.சேனாதிராஜாவுக்கும் இடையே நேற்றுத் தொலைபேசி ஊடாக நீண்ட நேரம் பேச்சு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நிலாவரைப் பகுதியில் திடீரென தொல்லியல்துறையினர் மற்றும் இராணுவத்தினர் உள்ளிட்டவர்கள் சென்று தொல்லியல் அகழ்வாராய்ச்சிகளை நடத்தியமை தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்கு மாவை கொண்டுவந்தார்.

இவ்வாறான செயற்பாடானது தமிழ் மக்கள் மத்தியில் கிளர்ச்சிகளை ஏற்படுத்துகின்றது எனவும், பதற்றமான சூழல்களை உருவாக்குகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு குருந்தூர் மலை விடயம் தொடர்பாகவும் இராஜாங்க அமைச்சரிடம் மாவை சேனாதிராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் தொல்லியல் துறை சார்ந்த நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் இருக்கும்போது பெரும்பான்மை சமூகத்தினரை மட்டும் பயன்படுத்தி நிலங்களை ஆக்கிரமிக்கும் வகையிலான செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும் என்றும் அவர் கோரினார்.

அதற்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, எதிர்வரும் காலத்தில் அகழ்வாராய்ச்சிப் பணிகளின்போது யாழ்.பல்கலைக்கழகத் தரப்பினரையும் உள்ளீர்ப்போம். இனம், மதத்தின் பெயரால் தொல்லியல்துறை செயற்படவில்லை என்று உறுதியளித்தார். (எ-22)

## தமிழர்களின்....

போர்வையிலான நில அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் மற்றும் அவசர விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நாளை தமிழ் கட்சிகள், புத்திஜீவிகள், கல்வியலாளர்கள் கலந்துரையாடவுள்ளனர் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது

தமிழ்த் தேசியக் கட்சியின் ஏற்பாட்டில் இன்று (நேற்று) கட்சிகளின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடினர். தமிழ்த் தேசியக் கட்சியின் பங்காளிக்கட்சிகளின் பிரதிநிதிகளும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக சோ.கலையமுதன், ரெலோ சார்பாக தி.நிரோஷ், புளொட் சார்பாக பா.கஜதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போது தமிழ் பிரதேசங்களில் நடைபெறும் நில அபகரிப்பு முயற்சிகள், தொல்லியல் இடங்கள் என்ற போர்வையிலான நிலப் பறிப்புக்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயங்கள் உள்ளிட்ட தற்போது அவசரமாக முன்னெடுக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நாளை (இன்று) காலை 10 மணிக்கு தமிழ்க் கட்சிகள், புத்திஜீவிகள், கல்வியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்களுடன் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்வது என்றும், அதில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது. என்றார். (எ-26)

## மன்னாரில்...

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

மன்னார் சிலாவத்துறையைச் சேர்ந்த 63 வயதுடைய ஒருவரே கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார். அவருக்கு உடல்நலக்குறை ஏற்பட்டதை அடுத்து நேற்றுமுன்தினம் அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். எனினும் மருத்துவமனை கொண்டு செல்ல முன்னரே அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் நேற்று அதன் முடிவுகள் வெளியாகியிருந்தன. உயிரிழந்தவருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை அதில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-23)

## கொரோனா....

அடுத்து வவுனியா நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தோருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் முடிவுகள் கட்டம் கட்டமாக வெளியாகும் நிலையில் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தொகுதி முடிவுகள் நேற்று மாலை வெளியாகின. அதில் 20 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வவுனியா பசார் வீதியைச் சேர்ந்தவர்களே தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அதேவேளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வவுனியாவைச் சேர்ந்த 6 பேருக்கும், மன்னாரைச் சேர்ந்த 23 பேருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மன்னாரில் தொற்றுடன் இனங்காணப்பட்டவர்கள், தொற்றாளர்களுடன் தொடர்புபட்டவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட ஒருவருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் புத்தளம் சாலையில் பணியாற்றும் இவர், விடுமுறையில் வீடு வந்திருந்தார். அவருடன் பணியாற்றும் ஒருவருக்கு புத்தளத்தில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, இவர் தனிமைப்படுத்தப்பட்டார். பின்னர் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (எ-26,110)

# நினையாத நேரமொன்றில் அமெரிக்காவுக்குப் பதிலடி!

## ட்ரம்பையும் பழிதீர்ப்போம் என்கிறார் ஈரானின் தலைவர் அயத்துல்லா



**தெஹ்ரோன், ஜனவரி 23**

**அமெரிக்க அதிபராக ஜோ பைடன் பதவி ஏற்றுள்ள நிலையில், நினையாத நேரத்தில் அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கப்படும். சுலைமானி கொல்லப்பட்டதற்கு நிச்சயம் பழிவாங்குவோம் என்று தெரிவித்தார் ஈரானின் தலைவ ரான அயத்துல்லா அலி காமெனி.**

இதுகுறித்து அயத்துல்லா அலி காமெனி தனது கீச்சகத்தில் 'சுலைமா னியின் மரணத்துக்குப் பழிவாங்குவது தவிர்க்க முடியாதது. சுலைமானியின் மரணத்துக்கு உத்தரவிட்ட மனிதரும் (ட்ரம்ப்) பழிவாங்கலை எதிர்கொள்ள வேண்டும். பழிவாங்கல் எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம்' என்று பதிவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி பாக்தாத்தில் ஈரானின் குவாட்ஸ் படையின் தளபதி குவாசிம் சுலை மானி, துணைத் தளபதி அபு மெஹதி முஹென்திஸ் உள்ளிட்டவர்களை அமெரிக்கா ஆளில்லா விமானம் மூலம் தாக்கிக்கொன்றது. இந்த விவ காரத்தில் பழிக்குப் பழி வாங்குவோம் என்று முழக்கமிட்ட ஈரான் அரசு, அமெ ரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பைத் தீவிரவாதியாக அறிவித்த மையும் குறிப்பிடத்தக்கது. (ம)

**தேவை**
**மேசன், கூலி**
வேலையாள்கள் தேவை.
076 660 1600

**வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு**
யாழ் - மானிப்பாய் வீதியில் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் இரண்டேகால்ப் பரப்புக்காணியும் அதனுடன் சேர்ந்த வீடும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்.
077 328 8279


**வேலையாள் தேவை**
6 TON கல் றோளரிற்கு Driver தேவை.
குறிப்பு:அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்
துர்க்கா கிறேசர் புத்தூர்
077 844 8775

**ஊர்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**
- 2 மாத குஞ்சுகள்:Rs 275/=
- 3மாத குஞ்சுகள் :Rs 460/=
- 1 நாள் காடை குஞ்சுகள்:Rs 25/=
- ஊர்சேவல்:1Kg:700/=

JERI Farm, திருநெல்வேலி
0773549140 / 0772741206

# ஈராக்கில்
# 3 ஆண்டுகளின் பின்னர் தற்கொலைத் தாக்குதல்

## தலைதூக்குகிறதா ஐ.எஸ்.ஐ.எஸ்?



பக்தாத், ஜன. 23

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் ஆதிக் கத்தில் இருந்து விடுபட்டு சுமார் மூன்று ஆண்டுகளின் பின்னர் ஈராக்கில் நேற்று தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் 32 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயங்களுக்கு உள் ளாகினர்.

மத்திய பக்தாத்தின் வர்த்தக மையத்தில் டயாரன் சதுக்கம் என்று அழைக்கப்படும் சந்தைத் தொகுதியிலேயே தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. குறித்த பகு தியில் பெரும்பாலும் இரண்டாம் தர துணிவகைகள் விற்பனை அதிகமாக நடைபெறும். அத னால் ஏராளமான மக்கள் இந்த சந்தைக்கு வருவது வழக்கம். இந் தப் பின்னணியில்தான் மேற்படி தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆனால் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு மீண்டும் ஆதிக்கம் செலுத்த எத்தனிக்கின் றதா என்ற அச்சம் ஏற்பட்டுள் ளது. (ம)

**பதவி வெற்றிடம்**
- வரவேற்பாளர்கள்
- இயந்திர இயக்குநர்கள்

யாழ் நகரில் இயங்கும் அச்சகம் ஒன்றுக்கு வரவேற்பாளர்கள் (ஆண்/பெண்) மற்றும் இயந்திர இயக்குநர்கள் தேவை, பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.



நேர்முகத் தேர்வு: 25.01.2021 திங்கட்கிழமை, மு.ப. 9.00- 1.00 மணிவரை
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
ES பிறிண்ரர்ஸ்
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் ராச வீதியில் ராசவீதி சந்திக்கு அருகாமையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்.
தொடர்பு - குரு
077 8051 655
077 5963 845
077 4683 354

**விஸ்டம்** தொழில் நுட்பக் கல்லூரி
இல63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
A/L 2021, 2022 தொழினுட்பப் பிரிவு
மாணவர்களுக்கான வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பம்
25.01.2021 திங்கட்கிழமை பிற்பகல் 3.30
A/L 2020 DAY வகுப்புக்கான அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
076 552 9093 / 077 248 7774 / 021 221 7860
மேலதிக தகவல்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

**நீங்களும் பட்டதாரியாகலாம்**
BA, BCOM, BSc, BEng, MA, MSc, MBA, PhD
- நீங்கள் தொழில்புரியும் துறையில் அனுபவம் மற்றும் கல்வித்தகைமை இருந்தும் ஒரு Degree இல்லையா?
- நீங்கள் ஒரு அரச உத்தியோகத்தை எதிர்பார்ப்பவரா?
- குறுகிய காலத்தில் பட்டப்படிப்பை முடிக்க ஆவலாக உள்ளீர்களா?
- இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழும் சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்றது.

UGC APPROVED
உடன் பதிவு செய்யுங்கள்

•BA (General) •BA in Media/Journalism • BA in English
•BA in Tamil | •BCOM. • BBA
•BA in Psychology •MA Programes & PHD Programs • BA in Social Work
• Bachelor of Education

உள்நாட்டில் / சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழக பட்டமளிப்பு
FEBRUARY Intake
-Register
SMS Your Name & Address

1Year Top Up Degree (ஒரு வருடகால பட்டப்படிப்பு) வகுப்புக்கள் வாரத்தில் ஒரு நாள் மட்டுமே இலகு கொடுப்பனவு முறைகள் உயர்தரம் வாய்ந்த பட்டமளிப்பு விழா ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் நடைபெறும் தகைமை வாய்ந்த பயிற்று விப்பாளர்கள்

AUSTRALIAN BUSINESS CAMPUS
NO, 160 2 nd CROSS STREET, JAFFNA.
Contact no
0777 302224 0777 128633 021 4366676
web: www.abcedu.lk Email: abcedu171@gmail.com

50 ANNIVERSARY ஆவது ஆண்டை நோக்கிய கல்விச் சேவையில்
புதிய நிர்வாகத்தின் கீழ்
யாழ் நகரின் பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்
The Express Institute
Irupalai Junction, Kopay.
கணிதம்: வரதன் ஆசிரியர், சண். வாமதேவன், B. நேசரூபன்
விஞ்ஞானம்: இரா. செல்வவடிவேல், N.மகேந்திரன், P.பிறின்ஸ்ரன்
ஆங்கிலம்: S.அகிலன், S.விதுஷன்
வரலாறு: N.அன்ரன், V.விதிந்தன்
தமிழ்: A.றமேஷன், M.சதீஸ்
சமயம்: V.விதித்தா, M.சதீஸ்
ஜனவரி 25 பி.ப 03.15க்கு ஆரம்பம்
தரம் 4 முதல் O/L வரையான புதிய வகுப்புக்களிற்கு கட்டண குறைப்புடன் அனுமதிகள் வழங்கப்படுகின்றன.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.